# இயேசு அழைக்கிறார்

YESU AZHAIKIRAR - TAMIL MONTHLY - AUGUST 2025
VOL. 23 ISSUE 5 - 28 PAGES - Rs. 21/-

ஆகஸ்ட் 2025



உள்ளே...

**ஆசீர்வாதங்களின் தகப்பன்**
Dr. பால் தினகரன்

வாலிபர் பகுதி
**விருப்பங்கள் நிறைவேறும்**

குடும்ப பகுதி
**வாசஸ்தலத்தில் பிரசன்னம்**

**பெதஸ்தாவில் தேவனுடைய அற்புத வல்லமை**

உங்களுக்கு நன்மையுண்டாகும்
என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்;
அவர்கள் தங்கள் கிரியைகளின்
பலனை அனுபவிப்பார்கள்
(ஏசாயா 3:10)

# ஆசீர்வாதங்களின் தகப்பன்



அன்பானவர்களே, ஆண்டவர், உங்களுக்குத் தகப்பனாக இருக்கப்போவதாக என்னிடம் கூறினார். ஆம், இந்த மாதம் முதல் தேவன் உங்களுக்குத் தகப்பனாக இருப்பதை நீங்கள் காண்பீர்கள். **“நான் உங்களை ஏற்றுக்கொண்டு, உங்களுக்குப் பிதாவாயிருப்பேன், நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்களென்று சர்வவல்லமையுள்ள கர்த்தர் சொல்லுகிறார்” (2 கொரிந்தியர் 6:18)**

### ஆசீர்வாதங்கள்

இப்பொழுதிலிருந்து ஆண்டவரை நீங்கள் தகப்பனாகக் கொண்டிருக்கும்படி அவர் விரும்புகிறார். இதுவரை நீங்கள் கண்ட இழப்புகள், வேதனைகள், துக்கங்களுக்குப் பதிலாக பூரண ஆசீர்வாதத்தை தருவதோடு, மூடியிருக்கும் கதவுகளையும் அவர் திறப்பார்; நீங்கள் வெட்கப்பட்ட எல்லா இடத்திலும் உங்களைக் கனப்படுத்துவார்.

வேதம், “**பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரம பிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா**” (லூக்கா 11:13) என்று கூறுகிறது. ஆம், தேவன் நன்மையான ஈவுகளைக் கொடுக்கிறார். அவர் நமக்குத் தருகிற பெரிய நன்மையான ஈவு பரிசுத்த ஆவியானவரே. தேவனுடைய ஆசீர்வாதங்கள், “உன் தேவனாகிய கர்த்தர் உன்மேல் அன்புகூர்ந்தபடியினால், உன் தேவனாகிய கர்த்தர் அந்தச் சாபத்தை உனக்கு ஆசீர்வாதமாக மாறப்பண்ணினார்” (உபாகமம் 23:5) என்று கூறப்பட்டுள்ளபடி, எல்லா சாபங்களையும் அழித்துப்போடுகிறது. ஆம், ஆசீர்வாதங்கள் சாபங்களை அழிக்கிறது. உலகம் சாபங்களை கொண்டு வருகிறது; ஆனால், தேவன் ஆசீர்வாதங்களை அனுப்புகிறார். ஒன்றன்பின் ஒன்றாக கணைகள் சீறி வரலாம். ஆனால், இன்னொரு கணை வந்து அதை அழித்துப்போடும். அவ்வாறே, சத்துரு உங்களை அழிப்பதற்கு கணையை ஏவும்போது, மறுபக்கத்திலிருந்து தேவனுடைய தயவு வந்து அதை அழித்துப்போடும். நீங்கள் பிழைப்பீர்கள். அவர், “ஒரு ஆசீர்வாதத்தின் பின் மற்றொரு ஆசீர்வாதம் வரும். நான் உன் தகப்பன். உனக்கு சகாயம் பண்ணுவேன்” என்று சொல்கிறார் (யோவான் 1:16).

### பெருகும் ஆசீர்வாதங்கள்

இரண்டாவதாக, உங்கள் வாழ்க்கையில் ஆசீர்வாதங்கள் பெருகுவதைக் கண்டு தேவனை தகப்பனாக அனுபவிப்பீர்கள். வேதம், “...அவன்



**Dr. பால் தினகரன் - paul@jesuscalls.org**

Pauldhinakaranofficial

ஒருவனாயிருக்கையில் நான் (தேவன்) அவனை அழைத்து, அவனை ஆசீர்வதித்து, அவனைப் பெருகப் பண்ணினேன்” (ஏசாயா 51:2) என்று கூறுகிறது.

ஆபிரகாம் தனிமையாக இருக்கும்போது தேவன் அவனை அழைத்தார். அவனை ஆசீர்வதித்து, பெருகப் பண்ணினார். அவர் பெருக்கத்தின் தேவன்.

### இரட்டிப்பான ஆசீர்வாதங்கள்

தேவன், “...இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன்” (சகரியா 9:12) என்று கூறுகிறார். ஆம், நீங்கள் இழந்தவற்றையெல்லாம் இரட்டிப்பாக திரும்பப் பெற்றுக்கொள்வீர்கள். இரட்டிப்பான பிரச்னை அல்ல; இரட்டிப்பான ஆசீர்வாதம். அவை எல்லா பக்கங்களிலுமிருந்தும் வருவதோடு, மேலிருந்தும் கீழிலிருந்தும் வரும். இயேசு எல்லா உபத்திரவத்திற்கும் உரிய கிரயத்தைக் கொடுத்துவிட்டார். இயேசு சிலுவையில் பட்ட பாடுகளின்மீதும், வெற்றியின்மீதும் நம் நம்பிக்கை இருக்கிறது.

**“உன் தகப்பனுடைய தேவனாலே அப்படியாயிற்று, அவர் உனக்குத் துணையாயிருப்பார்; சர்வவல்லவராலே அப்படியாயிற்று, அவர் உயர வானத்திலிருந்து உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், கீழே ஆழத்தில் உண்டாகும் ஆசீர்வாதங்களினாலும், ஸ்தனங்களுக்கும் கர்ப்பங்களுக்கும் உரிய ஆசீர்வாதங்களினாலும் உன்னை ஆசீர்வதிப்பார்” (ஆதி. 49:25)**




தேவன், இரட்டிப்பான பங்கை பெறுவதற்கான விருப்பத்தை உங்களுக்குத் தருகிறார். நீங்கள் பெறக் கூடிய மிகப்பெரிய ஆசீர்வாதம் அதுவாக இருக்கிறது. “நான் முடிந்துபோனேன். எனக்கு எதிர்காலம் இல்லை. எனக்கு யாராலும் உதவி செய்ய முடியாது. என்னுடைய சூழ்நிலை உதவி செய்வதற்கு அப்பாற்பட்டது” என்று கூறி, பாடுபட்ட ஆண்டுகளோடு ஒப்புரவாகிவிடாதிருங்கள்.

### இரட்டிப்பாக பெறுவதற்கு விருப்பம்

தேவன் இப்போது பெருக்கத்திற்கான, பரிபூரணத்திற்கான, இரட்டிப்பான பங்குக்கான விருப்பத்தை உங்களுக்குள் வைப்பார் (சங்கீதம் 20:4). வேதம், “**அவர் சகலத்தையும் அதினதின் காலத்திலே நேர்த்தியாகச் செய்திருக்கிறார்; உலகத்தையும் அவர்கள் உள்ளத்திலே வைத்திருக்கிறார்**” (பிரசங்கி 3:11) என்று சொல்கிறது. அதுதான் விருப்பம். மாம்சத்தின் இச்சை தவறானது. வேதம், “**ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்**” (கலாத்தியர் 5:16) என்று கூறுகிறது. தேவனுடைய திட்டத்தின்படி பெருகுவதற்கான விருப்பத்தை, இரட்டிப்பானதை பெற்றுக்கொள்ளும் விருப்பத்தை உங்களுக்கு தருவார்.

### இரட்டிப்பான பங்கை பெற்றுக்கொள்வது எப்படி?

இரட்டிப்பானதை விரும்பிய ஒரு மனிதனை வேதாகமத்தில் பார்க்கிறோம். அவன் பெயர் எலிசா. எலியா, “நான் உலகை விட்டுச் செல்லவேண்டிய நேரம் வந்திருக்கிறது. உனக்கு நான் என்ன செய்யவேண்டும்? நீ ஏன் என்னைப் பற்றிக்கொண்டிருக்கிறாய்?” என்று எலியா கேட்டபோது, “உமக்குள் இருக்கும் தேவ ஆவியானவர் இரட்டிப்பாக என்மேல் வரவேண்டும்” என்று எலிசா கூறினான்.

அதேபோல, நீங்களும் உங்கள் பரம தகப்பனிடம், “எனக்கு உம்முடைய ஆவி, சந்தோஷம், ஆசீர்வாதங்கள், நீர் எனக்காக சிலுவையில் செய்த தியாகத்தின் பலன், இரட்டிப்பான ஆசீர்வாதமும் சுதந்தரமும் வேண்டும்” என்று போராடி கேளுங்கள்.

1962-ம் ஆண்டு T.L. ஆஸ்பார்ன், இந்திய மக்களுக்கு இயேசுவின் நாமத்தினால், தம் ஊழியத்தின் மூலம் அற்புதங்களைக் கொண்டு வந்ததை என் தந்தை பார்த்தபோது, “எனக்கும் இந்த இயேசு வேண்டும். நான் அவருடைய வார்த்தையை மட்டும் கேட்டிருக்கிறேன். ஆனால், இன்னும் அவரை அனுபவிக்கவில்லை” என்று கூறினார். தேவ ஆவியைப் பெறுவதற்காக 7 ஆண்டுகள் என் தந்தை அழுதார். ஆண்டவர் இயேசு அவருக்கு தரிசனமாகி, தமது அன்பின் ஆவியால் அவரை அபிஷேகித்தார். அது அவரது வாழ்க்கையை மாற்றியது. என் தந்தையின் அன்பும், மனதுருக்கமும் நிறைந்த ஊழியத்தின் மூலம் லட்சக்கணக்கானோர் தேவ ராஜ்யத்துக்குள் வந்தனர். அதோடுகூட, தேவனுடைய கிருபை அவருடைய குடும்பத்தினர்மீதும் வந்தது. இன்றைக்கு அடுத்த தலைமுறையும் இன்னும் அதிகமாக இயேசுவின் அன்பை சுமந்துசெல்ல ஆயத்தமாகிவிட்டது. ஒரு மனிதனுடைய தேவ ஆவியை பெறவேண்டும் என்ற விருப்பத்தினால் ஐந்து தலைமுறைகள் அபிஷேகிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம்.

இன்று நீங்கள் இரட்டிப்பான பங்கை பெற்றுக்கொள்ளப் போகிறீர்கள். அதற்கு என்ன அவசியமாயிருக்கிறது? லட்சக்கணக்கானோருக்கு ஆசீர்வாதத்தை அருளும் பணியை நிறைவேற்றுவதில் நீங்கள் இயேசு அழைக்கிறார் ஊழியத்தோடு இணைந்து, எலியாவுடன் நடந்த எலிசாவைப்போல நடக்கவேண்டும்.

எலிசாவுக்கு இரட்டிப்பான பங்கை அளித்ததைப் பற்றி உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். “ஆண்டவரே, எனக்கு இரட்டிப்பான பங்கு வேண்டும்” என்று ஜெபிப்பதோடு முடிந்துவிடுவதல்ல. இரட்டிப்பான பங்கை பெறுவதற்கு நீங்கள் இயேசுவுடனும், அவருடைய ஊழியர்களுடனும் நடக்கவேண்டும்.

தேவன் உங்களுக்குக் கொடுத்த அழைப்பை நிறைவேற்றுங்கள். அவர் இரட்டிப்பான ஆசீர்வாதத்தை உங்களுக்குத் தருவார்



## உலகத்திலிருந்து உங்களை விருத்தசேதனம் பண்ணுங்கள்

முதலாவது, எலியா, எலிசா இருவரும் சேர்ந்து கில்காலுக்குச் சென்றார்கள் (1 இராஜா. 2:1). கில்கால் என்பது என்ன? யோசுவா, அடிமைப்பட்டிருந்த தேசத்திலிருந்து வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்லும் முன்னர், இஸ்ரவேலர் அனைவருக்கும் விருத்தசேதனம் பண்ணினான் (யோசுவா 5:9). அதன் பிறகே, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் செல்ல ஆயத்தமானார்கள். நம் வாழ்க்கையில் வாக்குத்தத்தங்களை சுதந்தரிக்க, நாம் சரீரப்பிரகாரமாக அல்ல; ஆவிக்குரியவிதத்தில் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும். இரட்டிப்பான பங்கை, பரிபூரண ஆசீர்வாதத்தை பெறுவதற்கு முதற்படியாக நாம் விருத்தசேதனம் பண்ணப்படவேண்டும்.

எரிகிற முட்செடியின் மூலம் தேவன் மோசேயோடு பேசி, “**நீ போய் என் ஜனங்களை எகிப்தைவிட்டு வெளியே அழைத்துவந்து பார்வோனிடமிருந்து விடுதலை செய்**” என்று கூறினார் (யாத். 4:24-26). மோசேயின் வாழ்க்கையில் அது மிகப்பெரிய பணியாக இருந்தது. அவன் ராஜாவால் கொலை செய்வதற்கு தேடப்பட்டான். தேவன், “திரும்பி போ; தேசத்தை காத்துக்கொள்; போய் ஒரு தேசத்தை கட்டமைத்திடு; ஒடுக்கப்பட்டவர்கள், அடிமையாக இருப்பவர்களுக்கு புதியதொரு தேசத்தை உருவாக்கு” என்று கூறினார். அது அவனுக்குக் கொடுக்கப்பட்ட பணி. தன்னுடைய சத்தத்தைக் கேட்டு, ஜனங்களை இரட்சித்து, அவர்களை தேவனுடைய தேசமாக இயேசு அழைக்கிறார் ஊழியத்தின்மூலம் கட்டியெழுப்புவதற்கு தேவனுக்கு ஒரே ஒரு மனிதன் வேண்டும். மிகுந்த தயக்கத்தோடு மோசேயும் அவனது மனைவியும் அவன் மகனும் எகிப்துக்குத் திரும்பி போனார்கள். மோசே தேவனுடைய வேலையாகவே சென்றான். கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். ஆனால், தேவன் எதிர்ப்பட்டு மோசேயை கொல்ல பார்த்தார் என்று வேதம் சொல்கிறது. அதிர்ச்சியாக இருக்கிறதல்லவா! பல வேளைகளில் எங்கள் வாழ்க்கையிலும் இப்படி நடக்கிறது.

தேவன், தானியேல்களையும் யோசேப்புகளையும் எழுப்பும்படி கிறிஸ்தவ நோக்குடன் முதலாவது தொழில் நுட்ப பல்கலைக்கழகத்தை கட்டும்படி என் தந்தையிடம் பேசியபோது, எங்கள் கைகளில் ஒன்றுமில்லாதிருந்தது. எப்போதும் தேவன் உங்கள் கரங்களில் ஒன்றுமில்லாமல் வெறுமையாக இருக்கும்போதுதான் பேசுவார். தேவன் வந்து, “ஒரு பல்கலைக்கழகத்தை கட்டு; ஒரு சுகமளிக்கும் மையத்தை, ஒரு மருத்துவமனையை, ஒரு ஆலோசனை மையத்தை, ஒரு ஊழியத்தை, திக்கற்றோருக்கான இல்லத்தை, இன்னும் பலவற்றை, ஒரு புதிய தேசத்தை கட்டு” என்று கூறினார்.

ஆனால், முதலாவது உள்ளத்தை உடைக்கும் ஒரு சம்பவம் நடந்தது. 17 வயதான என் தங்கையை கொடிய கார் விபத்தில் இழந்தோம். அவள் என் பெற்றோருடன் பயணித்து கொண்டிருந்தாள். என் தந்தை, நாளுக்கு 50 முறை அவளை முத்தமிடுவார். அவர் அவளை அதிகமாய் நேசித்தார். எதிரே தவறான திசையில் வந்த ஒரு பேருந்து, அவர்கள் பயணித்துக்கொண்டிருந்த காரின் மேல் மோதியது. அவள் மரித்து என் தந்தையின் மடியில் விழுந்தாள். க்ஷணப்பொழுதில் உயிர் பிரிந்துவிட்டது. எங்கள் உள்ளங்கள் உடைந்தது. ஆனால் ஆண்டவர், “எவ்வளவு காலமாய் அழுதுகொண்டிருப்பீர்கள்? ஏஞ்சல் என்னோடு இருக்கிறாள். சாத்தானின் முன்பு என்னை மறுதலிக்கப்போகிறீர்களா? இல்லை எழுந்து நின்று, ‘நாங்கள் இன்னும் ஆண்டவரை பின்பற்றுவோம்’ என்று பாடுகளின் மத்தியிலும் சொல்வீர்களா?” என்று கேட்டார். நாங்கள், “ஆண்டவரே, நாங்கள் எங்கு செல்வோம்? நாங்கள் பரலோகத்தை அடையவேண்டுமே! நாங்கள் உம்மை கேள்வி கேட்கமாட்டோம். நம்புவோம்” என்று கூறினோம். தேவ ஆவியானவர் எங்கள் பலவீனங்களில் உதவும்படி உடனே வந்தார்; தம்முடைய ஆவியில் எங்களை உயர்த்தினார். அதே ஆண்டில் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம், இன்றைக்கு ஏறத்தாழ 40,000 பேருக்கு பட்டமளித்து, பொறியியல், தொழில்நுட்பம், விவசாயம் என்று பல துறைகளில் உயர் ஸ்தானங்களில் அமரச்செய்துள்ளது; பலர் தேவ ஊழியர்களாக தேவனுக்கு ஊழியம் செய்து வருகிறார்கள். நாம் விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும். தேவனை கேள்வி கேட்கக்கூடாது.

மோசேயின் மனைவி சிப்போராள், தங்கள் மகனின் நுனித்தோலை வெட்டி, இரத்தம் தோய்ந்த நுனித்தோலை மோசேயின் மீது எறிந்தாள். அவன் காப்பாற்றப்பட்டான். எகிப்துக்குள் சென்று தேவ வல்லமை

யினால் மக்களை விடுவித்தான். இன்றைக்கும் நம்மிட மிருந்து வெட்டிப்போட வேண்டிய பல காரியங்கள் உள்ளன.

### வெறுப்பையும் முறுமுறுத்தலையும் விருத்தசேதனம் பண்ணுங்கள்

முதலாவது, ''நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம்பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது'' (ஏசாயா 1:15) என்று வேதத்தில் வாசிக்கிறோம். அது என்ன இரத்தம்? வேதம், ''தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதக னெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள்'' (1 யோவான் 3:15) என்று சொல்லு கிறது. தன் சகோதரனையாவது, சகோதரியையாவது பகைக்கிற யாரும் கொலைபாதகனாயிருக்கிறான். இயேசு அனைவர்மேலும் அன்புகூர நமக்குக் கற்றுகொடுத்திருக் கிறார். அவர், ''**பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே**'' (லூக்கா 23:34) என்று கூப்பிட்டார். தமது சரீரத்தையும் இருதயத்தையும் சிலுவையில் அறைந்தவர்களையும் அவர் நேசித்தார். ''நான் அவர்களை மன்னிக்காவிட்டால் யார் மன்னிப்பார்? பாவங்களை மன்னிக்கிறதற்கு, பாரங்களை சுமப்பதற்கு, சுகத்தை தருவதற்கு அதிகாரம் என்னிடம் உள்ளது. நான் அதை பயன்படுத்தி மன்னித்து அவர்களை இரட்சிக்கட்டும். நான் அழிப்பதற்கு அல்ல; இரட்சிப்பதற்கே வந்தேன்'' என்று நினைத்தார். பகைக் கிற, புண்படுத்துகிற நுனித்தோல்களை வெட்டிப்போடுங் கள். உங்களுக்கு தீமை செய்தவர்களை மன்னித்து, உங்கள் இருதயத்தை குணமாக்குங்கள்; எல்லா மனுஷ ரோடும் சமாதானமாயிருந்து தேவனை தரிசிக்கும் கிருபையை பெறுங்கள் (எபிரெயர் 12:14).

''**தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?'' (1 யோவான் 4:20)**

### வெட்டப்படவேண்டிய இரண்டாவது நுனித்தோல் 'முறுமுறுத்தல்'

கர்த்தர், ''**உன் பாட்டுகளின் இரைச்சலை என்னை விட்டு அகற்று; உன் வீணைகளின் ஓசையை நான் கேட்கமாட்டேன்**'' (ஆமோஸ் 5:23) என்றும், ''**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார் கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியி ருக்கிறது; அவர்கள் எனக்குப் பயப்படுகிற பயம் மனுஷ ராலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது**'' (ஏசாயா 29:13) என்றும் கூறுகிறார்.

நம்முடைய இருதயத்தை கர்த்தரை விட்டு தூரமாக விலக்குவது எது? முறுமுறுத்தல். இஸ்ரவேலர்கள் எகிப்திலிருந்து வெளியே அழைத்துவரப்பட்டு, பார்வோனி டத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டனர். ஆனால், அவர்களுக்கு உணவும் தண்ணீரும் கிடைக்காததால் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுக்க தொடங்கினார்கள். ஆனாலும் அவர்கள் ஜெபிக்கவும் செய்தார்கள். நீண்ட பிரார்த்தனை செய்தார்கள். தேவனுக்கு இசை வாசித் தார்கள். ஆனால் உபத்திரவம் வரும்போது தேவனுக்கு விரோதமாக முறுமுறுத்தார்கள். முறுமுறுத்தவர்களை பார்த்து, ''**கர்த்தருக்கு விரோதமான உங்கள் முறுமுறுப்பு களை அவர் கேட்டார்; நீங்கள் எங்களுக்கு விரோதமாய் முறுமுறுக்கிறதற்கு நாங்கள் எம்மாத்திரம்...உங்கள் முறுமுறுப்புகள் எங்களுக்கு அல்ல, கர்த்தருக்கே விரோத மாய் இருக்கிறது**'' (யாத்திராகமம் 16:7,8) என்று மோசே கூறினான்.

தேவன் என்னோடு தீர்க்கதரிசனம் மூலம் பேசி, ஏதாவது ஒரு பெரிய திட்டத்தை விசுவாசத்தில் எடுத்து லட்சக்கணக்கானோருக்கு ஊழியம் செய்யும்படி கூறும்போது, கரங்களில் எதுவும் இருக்காது. மோசே, யாக்கோபு, தாவீதுக்கும் கையில் ஒரு கோல் மட்டும் இருந்தது; மரணம் தொடர்ந்துகொண்டிருந்தது. என் வாழ்க்கைக்கு தொடர்பில்லாத பொல்லாத மக்களின் தீவிர தாக்குதலுக்குள்ளாகி இருப்பேன். அவர்கள் பொய்களை பரப்பி, என் நற்பெயரை கெடுத்து, தேவனால் கொடுக்கப் பட்ட வேலையை தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிப்பார்கள். ஆனால், என்னை ஆழமான தண்ணீர்களுக்குள் நடக்கும்படி செய்யும் தேவனுடைய மகத்துவமான வல்லமைக்காக அவரை துதிக்க கற்றுக்கொண்டேன்.

தேவனோடு நடப்பது என்பது, புயல்களை தவிர்ப்பது அல்ல; மாறாக அவற்றுக்கு மேலாக நடப்பது என்பதை புரிந்துகொண்டேன். முறுமுறுப்பது அவருடைய சமுகத்தை புறம்பே தள்ளிவிடும். ஆனால் அதை விசுவாசித்து, தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காக ஜெபித் தால், மூடிய எல்லா கதவுகளும் திறக்கும். எங்களை எதிர்த்த எல்லா மக்களும் மௌனமாக இருப்பர்; நீதி நிலைக்கும். தேசத்தின் முன்னர் நாங்கள், ''எங்கள் தேவன் ஆளுகை செய்கிறார்'' என்று அறிவிக்கக் கூடும். இவை எல்லாவற்றின் மூலமும் நான், நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்கள். யுத்தம் எளிதாக இருந்ததி னால் அல்ல; தேவன் உண்மையுள்ளவராக இருந்த தினால் அப்படியாயிற்று. யோபுவின் தேவன் மெய்யா கவே ஜீவிக்கிறார் (யோபு 13:15).

விருத்தசேதனம், இனி நான் அல்ல; கிறிஸ்துவே என்னில் ஜீவிக்கிறார் என்று கூறும். நீங்கள் தேவனுக்கு முன்பாக நீதியாயிருப்பதினால் உங்கள் நற்பெயர் ஒருபோதும் அசையாமல் இருக்கும். உங்கள் பெயர் தேவனுக்கு முன்பாக நீதியாயிருக்கிறது. நீங்கள் ஒரு போதும் முறுமுறுக்காமல், ஒருவரையும் பகைக்காமல், எல்லோர் மேலும் அன்புகூர்ந்தால் முற்றும் ஜெயங்கொள் ளுகிறவர்களாயிருப்பீர்கள்.

## தேவனுடைய அழைப்பில் நிலைத்திருங்கள்

பின்பு எலியா, ‘‘நான் பெத்தேலுக்கு போகவேண்டும்’’ என்றான். எலிசா, ‘‘பெத்தேலுக்கும் நான் வருவேன்’’ என்றான். பெத்தேல் என்பது என்ன? பெத்தேல் முதலில் தரிசனம் கிடைத்த இடம் (ஆதியாகமம் 28:19). தேவன், எலியா, ஊழியத்திற்கு அழைக்கும்போது எலிசா எதுவும் கேட்காமல் கீழ்ப்படிந்ததையும், செல்வாக்கான வாழ்க்கையையும் அவன் பெற்றோரையும் விட்டுவிட்டு, வரும் நாட்களில் தேவனுடைய பெரிதான அழைப்பை நிறைவேற்ற உடன் ஊழியனின் அழைப்பை ஏற்றுக்கொண்டதையும் நினைவுபடுத்தினார். தமது அழைப்பில் உண்மையுள்ளவனாயிருந்ததற்கு எலிசாவை கனப்படுத்தவேண்டிய நேரம் இது என்று நினைவுபடுத்தினார்.

**‘‘அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்’’ (ஆதி. 32:10)**

யாக்கோபு தன் பெற்றோரை விட்டான். அவனுக்கு எதுவுமே இல்லாதிருந்தது. அவனது அண்ணன் அவனை கொல்ல நினைத்ததால் மரண பயம் அவனுக்கு இருந்தது. அவன் கையில் கோலை தவிர வேறு எதுவும் இல்லாதிருந்தது. ஆனாலும் அவன் கீழ்ப்படிந்தான். தனது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தான். அவனுடைய தாயும் தகப்பனும், ‘‘எழுந்திருந்து போ’’ என்று கூறினார்கள். அவன் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தான். தேவன் அவனுக்கு தோன்றி, ‘‘இந்த தேசத்தை உனக்கு தருவேன். இன்றைக்கு நீ ஒரு பொருட்டானவன் அல்ல. எனக்கு, உன் பெற்றோரின் மூலம் கீழ்ப்படிந்ததினால் உன்னை பொருட்டானவன் ஆக்குவேன். நீ என் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தாய்’’ என்றார்.

கையில் எதுவுமற்ற நிலையில் முழுவதுமாக கீழ்ப்படிந்தான். பெத்தேல், நம்முடைய முதல் தரிசனத்திற்கு திரும்பும் இடமாகும். முதல் அழைப்புக்கு திரும்பும்போது, தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றி, நம் வாழ்க்கையில் எல்லாவற்றையும் பூரணப்படுத்தி அதை உறுதிப்படுத்துகிறார்.

என்னுடைய 19ம் வயதில் நான் பட்டமேற்படிப்பு படித்துக்கொண்டிருந்தபோது, என் தந்தை பிரசங்கிக்க வேண்டிய இடத்தில் பிரசங்கம் பண்ணும்படி தேவன் என்னை அழைத்தார். எந்த வரமும் என்னில் அப்போது செயல்படவில்லை; தங்களுக்காக பிரசங்கிக்கும்படி அனுப்பிய பெற்றோருக்குக் கீழ்ப்படிந்ததை தவிர வேறு அனுபவம் இல்லை. திறந்தவெளியில் 15,000 மக்களுக்கு மத்தியில் நான் பிரசங்கிக்க எழுந்தபோது மழை பெய்ய ஆரம்பித்தது. வியாதிப்பட்டிருந்தவர்கள்மேலும் தேவையோடு வந்திருப்போர்மேலும் மனதுருக்கம் கொண்டு, ‘‘ஆண்டவரே, மழையை நிறுத்தும். இந்த மக்கள் விடுவிக்கப்படாமல், சுகம் பெறாமல், மறுரூபமாகாமல் செல்லக்கூடாது’’ என்று சத்தமாக ஜெபித்தேன். உடனே மழை நின்றது. அன்றிரவு அற்புதங்கள் நடந்தன. அப்போதிலிருந்து ஆவியின் வரங்கள் என்னில் செயல்பட ஆரம்பித்தன. முன்பு குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்த ஒருவர், பன்னிரண்டு ஆண்டுகள் கழித்து, அன்று கூட்டத்திற்கு அவர் குடித்துவிட்டு வந்திருந்ததாகவும், என்னுடைய வஸ்திரத்தின் ஓரம் அவர்மேல்பட்டு, நினைவிழந்து விழுந்ததாகவும், எழும்பும்போது மறுரூபமடைந்து குடிப்பழக்கம் மறைந்திருந்ததாகவும் தற்போது கிறிஸ்துவை பிரசங்கிப்பதாகவும் கூறினார். தடைகள் இருந்தபோதிலும் அந்த சாட்சி எனக்கு தேவனுடைய அழைப்பு நிலைத்திருக்கிறது என்பதை நினைவுபடுத்தியது. உங்கள்மேல் வைத்த அழைப்பை கனப்படுத்த அவர் ஒருபோதும் மறப்பதில்லை. அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார். அவர் உங்களுக்கு தந்திருக்கும் அழைப்பில் செல்லுங்கள். உங்கள் மூலமாக நியமிக்கப்பட்ட மக்களுக்கு அவர் அற்புதம் செய்வார்.

## அழிவுநாளின் தீர்க்கதரிசிகளுக்கு விலகியிருங்கள்

மூன்றாவதாக, அவர்கள் எரிகோவுக்கு வந்தார்கள். எலியா, ‘‘நான் எரிகோவுக்கு போகிறேன்’’ என்றான். எலிசா, ‘‘நானும் உம்மோடு வருவேன்’’ என்றான். எரிகோ என்பது என்ன? எரிகோ, இஸ்ரவேலருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது என்று வேதம் கூறுகிறது (யோசுவா 6:21). அவர்களால் அதற்குள் நுழையவோ அதை மேற்கொள்ளவோ முடியவில்லை. ஏன்? அழிவுநாளின் தீர்க்கதரிசிகள் அங்கே இருந்தார்கள். எலியாவும் எலிசாவும் எரிகோவை நோக்கி நடந்துபோகும்போது, தீர்க்கதரிசிகள் வந்து எலிசாவிடம், ‘‘இன்றைக்கு தேவன் உன் எஜமானை எடுத்துக்கொள்ளப்போகிறார் என்று உனக்குத் தெரியுமா? தேவன் ஏற்கனவே எங்களுக்குக் காட்டியிருக்கிறார். இன்று நீ அநாதையாக போகிறாய்’’ என்று சொல்கிறார்கள். அவர்கள் தங்கள் அழிவுநாளின் தீர்க்கதரிசனங்களை பெரிதுபடுத்தினார்கள். அப்படி செய்து தேவனுடைய மக்கள் தங்கள் வாழ்க்கையில் தேவனுடைய திட்டத்திற்குள், நோக்கத்திற்குள் நுழைய முடியாமல் மூடிப்போட்டார்கள். தேசங்கள் தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற முடியாமல், தீமையை வெல்ல முடியாமல் அடைத்துப்போட்டார்கள். அவர்கள், ‘‘அங்கே பூமியதிர்ச்சி ஏற்படும் என்று தேவன் எனக்குக் காண்பித்தார். விமானங்கள் நொறுங்கும் என்று காண்பித்தார்’’ என்று சொல்லுவார்கள். உண்மையிலே தேவன் இந்தக் காரியங்களை காண்பித்தாரானால், அவர் எழுப்புதல் அல்லது படிப்பினைகள் அல்லது அவரது ஆசீர்வாதங்களை பெறுவதற்கான தீர்வுகளையும், தீமையை மேற்கொள்வதற்கான வழியையும் காண்பிப்பார். சத்துருவின் தீமையான தாக்குதல்களுக்கு பிறகு வரும் தேவனுடைய தயவை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்க நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். பிசாசு என்ன செய்வதற்கு திட்டம் வைத்திருக்கிறான் என்பதை மட்டும் அறிவிக்கும் தீர்க்கதரிசிகளுக்கு பதிலாக, தேவன் செய்யும் பதிலையும் அறிவிக்கக்கூடியவர்கள் வேண்டும். சிலர், ‘‘சகோதரரே, நான் ஜெபித்தபோது, பிசாசு



## இறுதிவரை தொடருங்கள். நீங்கள் வழிநடத்துவீர்கள்

உங்களுக்கும் எனக்கும் இடையே நின்று கொண்டிருப்பதை பார்த்தேன்'' என்பார்கள். உண்மையான தேவனுடைய ஊழியன் அந்தப் பிசாசை இயேசுவின் நாமத்தினால் விரட்ட அழைக்கப்பட்டிருக்கிறான். அதைப் பார்த்துவிட்டு பயத்துடன் பேசுவதற்கோ, ''யாரோ உனக்கு பில்லி சூனியம் செய்துவிட்டார்கள்'' அல்லது ''நீ பாவம் செய்திருக்கிறாய், தேவன் கோபமாயிருக்கிறார்'' என்று சொல்லவோ அல்ல! உண்மையான தீர்க்கதரிசனமாக இருந்தால், செய்த பாவத்தை சரியாக சொல்ல வேண்டும்; மனந்திரும்பினால் கிடைக்கும் தேவ கிருபையையும் தயவையும் கூறவேண்டும். அழிவுநாள் தீர்க்கதரிசனங்கள் தேவனிடமிருந்து வருபவை அல்ல!

குடும்பங்களின், ஆசீர்வாதங்களின், தேசங்களின் அழிவில் விருப்பப்படும் பொய் தீர்க்கதரிசிகளினால் எரிகோ அடைக்கப்பட்டிருந்தது. ஒருமுறை ஒரு மனிதர் வந்து என் தந்தையிடம், ''சகோதரர் தினகரன், நீங்கள் அதிக உயரத்துக்கு எழும்பிவிட்டீர்கள். நீங்கள் விழுந்து போவீர்கள் என்று தேவன் எனக்குக் காண்பித்தார். கவனமாக இருங்கள்'' என்று கூறினார். என் தந்தை, ''சகோதரரே, நான் ஏற்கனவே தரையில்தான் இருக்கிறேன். நான் இன்னும் எப்படி விழுவது? ஏற்கனவே அடிக்கப்பட்டிருக்கிறேன், துப்பப்பட்டிருக்கிறேன், உதைக்கப்பட்டிருக்கிறேன். ஆனாலும், இந்த எல்லா காயங்களின் மத்தியிலும் தேவ கிருபை என்னை இன்னும் பயன்படுத்துகிறது'' என்று கூறினார். அழிவு நாள் தீர்க்கதரிசிகளுக்கு ஒருபோதும் செவிகொடாதிருங்கள். அவர்களால் அதைரியப்பட இடங்கொடாதிருங்கள். தேவன், அழிவின் தேவனல்ல; இரக்கத்தின் தேவன்.

எலிசா என்ன சொன்னான்? ''நீர் என்ன சொல்வீர் என்பது எனக்கு தெரியும்'' நீங்கள் பிசாசுகளை விரட்டுவதற்கு முன்பு, முதலில் இந்த தீர்க்கதரிசிகளை விரட்டவேண்டும். ஏனெனில், அவர்கள் பிசாசின் சார்பாக தீர்க்கதரிசனம் கூறுகிறார்கள். நாம் இயேசுவை குறித்து தீர்க்கதரிசனம் உரைக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். ''இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது'' (வெளிப்படுத்தல் 19:10). பிசாசின் சாட்சி அல்ல. சாத்தானுடைய திட்டங்களை அல்ல; தேவனுடைய இருதயத்தில் உள்ளவற்றை உரைக்கவேண்டும். இதுதான் இரட்டிப்பான பங்கை பெறுவதற்கான பாதை ஆகும்.

### முடிவுவரை தொடருங்கள்

இறுதியாக எலியா, ''நான் யோர்தானுக்கு போகிறேன்'' என்றான். யோர்தானில் எலியா தன் சால்வையை எடுத்து தண்ணீரை அடித்தான். அது பக்கமாக பிரிந்து நின்றது. அவர்கள் அக்கரைப்பட்டார்கள். எலியா, எலிசாவுடன் ஆற்றைக் கடந்ததும் அக்கினிரதம் வந்து இருவரையும் பிரித்தது. சுழல் காற்று வந்து எலியாவை பரலோகத்திற்குக் கொண்டு சென்றது. அக்கினிரதம் எங்கே போயிற்று? அது எலிசாவை சூழ்ந்து கொண்டது. வாழ்நாள் முழுவதும் அவனை ரதம் சூழ்ந்திருந்தது. இரட்டிப்பான பங்கு. அநேக வேளைகளில், எலியா அக்கினிரதத்தில் பரலோகம் சென்றான் என்று நாம் நினைக்கிறோம். ஆனால், அவன் சுழல்காற்றிலே சென்றான் (2 இராஜா. 6:17). சீரிய ராஜா, எலிசாவை பிடிக்கும்படி இராணுவத்தை அனுப்பியபோது, எலியா, ''ஆண்டவரே, என் வேலைக்காரனின் கண்களைத் திறந்தருளும்'' என்றான். தோத்தானில் அவன் கண்கள் திறந்தபோது, எலிசாவை சுற்றிலும் அக்கினிமயமான இரதங்கள் நிற்பதைக் கண்டான். நீங்கள் யோர்தானை கடக்கும் போது அக்கினிமயமான இரதங்கள் உங்களைச் சுற்றிலும் இருக்கும். எந்தப் பொல்லாத ராஜாவும், பொல்லாத அரசாங்கமும் பொல்லாத மக்களும் உங்களை மேற்கொள்ள வரமாட்டார்கள். எலிசாவின் தேவன் அவர்கள் கண்களை குருடாக்குவார். நீங்கள் அவர்களை சுத்திகரிப்பின் இடத்துக்கு அழைத்துச்செல்வீர்கள். இந்த கிருபையை தேவன் உங்களுக்குத் தருகிறார். இதுதான் இரட்டிப்பான பங்கு. எலிசாவின் வாழ்க்கையை வாசித்தீர்களென்றால், அவன் ஒரு போதும் ஒன்றுக்காகவும் ஜெபித்ததில்லை. அவன் தேவனுக்கு நெருக்கமாக இருந்ததினால், அபிஷேகிக்கப்பட்டு அவருடன் இணைந்திருந்ததினால், அவன் சொல்கிற காரியங்கள் நடந்தன. உங்களுக்கு எதிராக உருவாக்கப்படும் ஆயுதம் எதுவும் வாய்க்காது. அவன் எதிரி நாட்டு ராஜாவையும் அபிஷேகம் பண்ணினான். தேவனுடைய தீர்க்கதரிசியின் வாழ்க்கையும் இப்படியே இருக்கவேண்டும். நீங்கள் ஒரு பொருட்டான நபராக இல்லாதிருக்கலாம். ஆனால் தேவன், ராஜாக்கள் உங்களை தங்கள் தகப்பனாக ஏற்றுக்கொள்வார்கள் என்று கூறுகிறார். அவர்களுக்கு வழிகாட்டுவதற்கு, அவர்களை சுமப்பதற்கு ஒரு தகப்பன் தேவை. நீங்கள் ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருக்கலாம். ஆனால், ராஜாக்களை, தேசங்களை, ஜனங்களை, பாஷைக்காரரை தேவ ராஜ்யத்திற்குள் நடத்துவீர்கள். இன்றைக்கே இரட்டிப்பான பங்கு உங்களுக்கு வருகிறது. உலகத்திலுள்ள அத்தனை காரியங்களும் வருகிறது. அதோடுகூட, தேவ ஆவியும் இரட்டிப்பாக உங்கள்மேல் வருகிறது. அக்கினிரதங்கள் உங்களைச் சூழ்ந்துகொள்ளும். தேவன் தாம் வாக்குக் கொடுத்த எல்லா கிருபையையும் உங்களுக்கு நிறைவாய் தந்தருள்வாராக.







# பெதஸ்தாவில் தேவனுடைய அற்புத வல்லமை





பெதஸ்தா சிறப்பு ஆசீர்வாத கூட்டம் 2025 ஜுலை 13 (ஞாயிறு) அன்று மதியம் 2 மணிக்கு காருண்யா நகரில் உள்ள Dr.டி.ஜி.எஸ். தினகரன் மையத்தில் நடந்தது. 7,500க்கும் அதிகமான மக்கள் தேவனுடைய அற்புத வல்லமையை அனுபவிக்க கூடி வந்திருந்தனர். ஸ்டெல்லா ரமோலாவும் டேனியல் டேவிட்சனும் துதி ஆராதனை வேளையை நடத்தினர். மக்கள் தங்கள் இருதயங்களை தேவ பிரசன்னத்தின் மீது வைக்கவும், விடுதலையை பெற்றுக்கொள்ளவும் ஆராதனை உதவியாக இருந்தது.

116-ம் சங்கீதத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட 'கர்த்தரை ஸ்தோத்தரி' என்ற பாடலை சகோதரி ஸ்டெல்லா தினகரன் ஜெபத்துடன் அர்ப்பணித்தார். மக்கள் கேட்டு ஆசீர்வாதம் பெறும்படி, Dr. பால் தினகரன் பாடலை தமது Paul Dhinakaran யூடியூப் சேனலில் வெளியிட்டார்.

சகரியா 9:12, யோவேல் 2:25 27, யோபு 42:10 ஆகிய வசனங்களின் அடிப்படையில் Dr. பால் தினகரன் இரட்டிப்பான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதைக் குறித்த தீர்க்கதரிசன செய்தியை வழங்கினார். நம்மை எதிர்க்கிறவர்களை மன்னித்து, அவர்களுக்காக ஜெபிப்பது, இரட்டிப்பான ஆசீர்வாதங்களை சுதந்தரிக்கும்படி நம்மை வழிநடத்தும் என்று அவர் கூறினார். அவர் தீர்க்கதரிசன பிரார்த்தனை ஏறெடுத்ததுடன், அநேகரை பெயர் சொல்லி அழைத்து தேவ ஆசீர்வாதங்களை அவர்கள் வாழ்வில் உரைத்தார்.

**பெயர் கூறி அழைக்கப்பட்டோரில் இருவரின் சாட்சிகள்:**

சகோதரி லதா, குடும்ப பிரச்னைகளால் போராட்டத்தோடு வந்திருந்தார்கள். தேவ சமாதானத்தையும் அவரது பிரசன்னத்தையும் பெற்றுக்கொண்டார்கள்.

வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்தநிலையில் வந்திருந்த சகோதரி சூர்யா, எல்லாவற்றையும் திரும்பப் பெற்றுக்கொள்வீர்கள் என்ற தீர்க்கதரிசன வார்த்தையை பெற்றுக்கொண்டார்கள். தன்னுடைய சூழ்நிலையில் தேவனுடைய வார்த்தை எவ்வாறு தன்னை தொட்டு நம்பிக்கை அளித்தது என்று அவர்கள் சாட்சி கூறினார்கள்.

சகோதரி இவாஞ்சலின் பால் தினகரன், மக்கள் சுகம் பெறுவதற்காக, குடும்பங்கள் சீர்ப்பட, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட ஊக்கமாக ஜெபித்தார்கள்.

Dr. பால் தினகரன் குடும்பத்தினரின் ஜெபத்தை நாடிய ஒவ்வொருவருக்கும் தனி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. மக்கள் கூட்டம் முடிந்து தேவ மகிமைக்காக சாட்சி பகிர பெலப்படுத்தப்பட்டவர்களாக, தேவனுடைய சீர்ப்படுத்தலையும் இரட்டிப்பான ஆசீர்வாதத்தையும் பெறுவதற்கு ஆயத்தப்பட்டவர்களாக திரும்பினார்கள்.



# வேலை ஆசீர்வாத திட்டத்தில் சேருங்கள்

"பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி... உன்னைப் போஷிப்பேன்" (ஏசாயா 58:14)

வேலை ஆசீர்வாத திட்டம், வேலை சார்ந்து பங்காளர்களின் இருதயத்தின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் ஐந்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இயேசு அழைக்கிறார் வேலை ஆசீர்வாத திட்டம், நல்ல வேலை, பதவி உயர்வு, ஏற்ற ஊதியம், போட்டித் தேர்வுகளில் வெற்றி, கடனிலிருந்து விடுதலை, வேலை செய்யுமிடத்தில் தயையும் சமாதானமும், பொறாமையிலிருந்து பாதுகாப்பு, சாதகமான பணியிட மாற்றம் இவற்றை தேடுகிறவர்களுக்கென ஜெபிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டது. அற்புதங்களைப் பெற்றவர்களின் கணக்கற்ற சாட்சிகள் வந்து சேர்ந்துள்ளன.




### வங்கி மேலாளராக பதவி உயர்வு

நான் இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் இளம் பங்காளர் திட்டம் மற்றும் வேலை ஆசீர்வாத திட்டத்தின் பங்காளராக இருக்கிறேன். ஒரு நிறுவனத்தில் ஒப்பந்த பணியாளராக பணிக்குச் சேர்ந்தேன். தேவனுடைய கிருபையால் முதலில் ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டது. ஆனால் திடீரென்று ஒருநாள் என்னுடைய ஒப்பந்த பணி காலம் 2022, நவம்பர் 30-ம் தேதியுடன் முடிவடைவதாக மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கப்பட்டது. நான் கடந்து செல்லும் சூழ்நிலைகள் குறித்து விவரித்து எனக்காக ஜெபிக்கும்படி கேட்டு Dr. பால் தினகரனுக்கு மின்னஞ்சல் மூலம் ஜெப விண்ணப்பம் அனுப்பினேன். எனக்கு நிரந்தரமான வேலை கிடைக்கும் என்று அவர் பதில் அனுப்பியிருந்தார். சில நாட்கள் கழித்து ஆச்சரியவிதமாக நான் முன்பு வேலை செய்த இடத்திலிருந்து Axis வங்கியில் மேலாளராக பணியில் சேரும்படி அழைத்தார்கள். அது நிரந்தர பணியிடம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. நான் அவமானப்பட்ட இடத்தில் தேவன் என்னை உயர்த்தினார். நான் தாழ்த்தப்பட்டிருந்த அதே இடத்தில் சிறந்த வாய்ப்பை கொடுத்து என்னை ஆசீர்வதித்த தேவனை துதிக்கிறேன். என்னுடைய எதிர்காலத்திற்காக ஊக்கமாக ஜெபித்த Dr. பால் தினகரனுக்கு நன்றி செலுத்துகிறேன்.

- பிரியதர்ஷினி, மாரதஹள்ளி, கர்நாடகா.

**சகோதரி பிரியதர்ஷினியைப் போல நீங்களும் இத்திட்டத்தில் இணைந்து செழிப்படையலாம். தேவன் தமது சித்தத்தை உங்கள் வாழ்வில் நிறைவேறப்பண்ணுவார்.**

### இந்தத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்:

- ◆ வேலை ஆசீர்வாத திட்ட பங்காளர்களுக்காக Dr. பால் தினகரனும் குடும்பத்தினரும் ஜெபிப்பார்கள். வேலையைக் குறித்த தேவ சித்தத்தை அறிந்துகொள்ள நாடுவோருக்கு தேவன் அளிக்கும் வெளிப்பாடுகளை தெரிவிப்பார்கள்.
- ◆ தொலைபேசி ஜெப கோபுர சங்கிலி ஜெபத்திலும், பெதஸ்தா ஜெப மண்டபத்திலும் வேலை ஆசீர்வாத திட்ட பங்காளர்களுக்காக தொடர் பிரார்த்தனை ஏறெடுக்கப்படும்.
- ◆ பங்காளர் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பு உண்டு. Dr. பால் தினகரன் குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஜெபிக்க வாய்ப்பு கிடைக்கும்.
- ◆ வேலை தேடுவோருக்காக ஜெப கோபுரத்தில், பணி திட்டமிடல் குறித்த சிறப்பு கூட்டங்கள் நடத்தப்படும்.

தேவனால் அருளப்பட்ட இந்த திட்டத்தில் நீங்களும் இணைந்து வேலையில் ஆசீர்வாதம் பெறலாம்.

நான் வேலை ஆசீர்வாத திட்டத்தில் இணைந்து, கீழ்க்காணும் விதத்தில் என் பங்கினை செலுத்த விரும்புகிறேன்.

☐ மாதந்தோறும் ரூ.100/- அல்லது அதற்கு அதிகமாக ☐ மாதந்தோறும் ஒருநாள் ஊதியம்
☐ வேலை கிடைத்ததும் முதல் மாத ஊதியம் ☐ மாதந்தோறும் ஊதியத்தில் 10% அல்லது ..........%

044- 23456677 என்ற எண்ணுக்கு காலை 8 முதல் இரவு 8 மணி வரை தொடர்பு கொண்டு ஊழியத்தைக் குறித்த விவரங்களை பெறலாம்.

SCAN TO DONATE

வேலை ஆசீர்வாத திட்டத்திற்கு எளிய வழிகளில் காணிக்கை அனுப்பக்கூடிய விவரங்களை இந்த இதழின் 11-ம் பக்கத்தில் காணலாம்.

# குடும்ப பகுதி



# வாசஸ்தலத்தில் பிரசன்னம்

அன்பானவர்களே, "என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எசே. 37:27). இது எவ்வளவு ஆச்சரியமான வாக்குத்தத்தம்! இன்னொரு மொழி பெயர்ப்பில், "என் வாசஸ்தலத்தை அவர்கள் நடுவில் ஸ்தாபிப்பேன்" என்று எழுதப்பட்டிருக்கிறது. இது, நம் மத்தியிலும், நம் குடும்பத்தின் மத்தியிலும் வாசம்பண்ணவேண்டும் என்ற அவரது ஆழமான விருப்பத்தை காட்டுகிறது. தேவனாகிய கர்த்தர் நம் இல்லத்தை தாம் வாசம்பண்ணும் ஸ்தலமாக தெரிந்து கொள்வது எவ்வளவு மகிமையானது!

## வாசம்பண்ண வாஞ்சிக்கும் தேவன்

ஆதி முதல் தேவனுடைய இருதயம் தம் மக்கள் நடுவில் வாசம்பண்ண விரும்புகிறது. இஸ்ரவேல் புத்திரர் தேவனை சந்திக்கும் பரிசுத்த ஸ்தலமான ஆசரிப்புக் கூடாரத்தில் அவரது சமுகம் தங்கியிருந்தது. அங்கே அவர் உலாவி, அவர்களை வழிநடத்தினார்; பாதுகாத்தார். அவரது சமுகம் அவர்களுக்கு பெரிய பெலனாக அமைந்தது.

இன்று, அதைக்காட்டிலும் அதிகமாக நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். **"உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?"** (1 கொரி. 6:19) என்று வேதம் கூறுகிறது. நமக்கு இப்போது ஓர் ஆசரிப்புக்கூடாரம் தேவையில்லை. தேவன் நம் நடுவில், நம் இருதயங்களிலும் இல்லங்களிலும் வாசம்பண்ணுவதை தெரிந்துகொண்டிருக்கிறார்.

நம் வாழ்வினுள், குடும்பத்தினுள் அவரை வரவேற்கும்போது, அவர் தமது சமாதானத்தினால் நம்மை நிரப்புவார். அவரது சமுகம் நம் உறவுகளை மறுரூபமாக்கும்; குழப்பத்தை அகற்றும்; முறிவை சீர்ப்படுத்தும். தேவனை நம் நடுவில் கொண்டிருப்பது எவ்வளவு சிலாக்கியம்!

## பரிசுத்தத்திற்கும் ஒற்றுமைக்கும் அழைப்பு



தேவன் நமக்குள் வாசம்பண்ணுவதால் நாம் பரிசுத்தமாய் வாழ முயற்சிக்க வேண்டும். உலகம், "உன்னையே நம்பு" என்று கூறுகிறது. ஆனால், தேவபிள்ளைகளாகிய நாம் யாருக்குச் சொந்தமானவர்கள் என்பதை அறிவோம். நம் பெலன், நமக்குள் வாசம்பண்ணுகிறவரிடத்தில் உள்ளது.

**"தீமையைப் பார்க்கமாட்டாத சுத்தக்கண்ணனே"** (ஆபகூக் 1:13) என்று வேதம் அவரை அழைக்கிறது. தேவன் பரிசுத்தர். பாவத்தை அவரால் பார்க்க முடியாது என்பதால், அவருடைய நாமத்தால் அழைக்கப்படுகிற நாமும் நம் குடும்பமும் எவ்வளவு பரிசுத்தமாய் வாழ வேண்டும்? நம் குடும்பத்தை தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது, நாம் அவரது ஆசீர்வாதங்களுக்கான வாசலை திறக்கிறோம். நம் இல்லங்களை பரிசுத்த ஆவியை துக்கப்படுத்துகிற காரியங்களிலிருந்து பாதுகாத்து, அவரை வரவேற்கிற ஜெபம், ஆராதனை மற்றும் அன்பாகிய சூழலை உருவாக்கவேண்டும்.

## கிறிஸ்துவின் சரீரத்துடன் இணைந்திருங்கள்

பக்தியற்ற காரியங்களின் தாக்கம் மிகுந்த இன்றைய உலகில் நமக்கு பக்தியுள்ள ஐக்கியம் அவசியமாயிருக்கிறது. ஆகவே, ஜெபக்குழுக்கள், ஜெப கோபுரம் போன்ற ஊழியங்கள் மிகவும் முக்கியமாயிருக்கிறது. விசுவாசிகள் நம்மைச் சுற்றியிருக்கும்போது நம்முடைய ஆவிக்குரிய ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்; நாம் விசுவாசத்தில் பெலத்துடன் வளருவோம்.

எங்கள் குடும்பத்தில் இதை நாங்கள் அனுபவித்திருக்கிறோம். என் கணவர் Dr. பால் தினகரன், முழு குடும்பமும் தேவனுடைய கிரியையில் வேரூன்றியிருக்கவேண்டும் என்பதில் கவனமாயிருப்பார். ஜெபம், ஊழிய ஈடுபாடு,

EvangelinePaulDhinakaran | evangeline@jesuscalls.org

> நம்முடைய குடும்பத்தை நாம் தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது, அவரது ஆசீர்வாதத்திற்கான வாசலை திறக்கிறோம்

தேவனுடைய வார்த்தையை வாசித்தல் என்று ஏதாவது பக்திக்குரிய செயல்பாடு இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். தேவன், நடுவில் இருப்பதால் எங்கள் குடும்பம், ஒருமனமாகவும், ஸ்திரமாகவும் இருக்கிறது. ஆம், எல்லா குடும்பங்களைப் போலவும் எங்களுக்குள் கருத்துவேறுபாடுகள் வரும். ஆனால், நாங்கள் ஜெபத்திற்காக ஒன்றாக கூடிவரும்போது, பரிசுத்த ஆவியானவர் சீர்ப்படுத்தி, சமாதானத்தை அருளுகிறார். தம்மை கனப்படுத்தும் குடும்பங்கள்மேல் ஆண்டவர் பிரியமாயிருக்கிறார்; நீடித்த ஒற்றுமையையும் சந்தோஷத்தையும் தந்து ஆசீர்வதிக்கிறார்.

உடன்படிக்கை பெட்டியை எண்ணிப்பாருங்கள். இஸ்ரவேல் புத்திரர் அதைக் கனம்பண்ணியபோது, அவர்கள் ஜெயித்தார்கள்; ஆசீர்வதிக்கப்பட்டார்கள். ஆனால், அதை அலட்சியம்பண்ணியபோது, உதாசீனம் பண்ணியபோது தோற்கடிக்கப்பட்டனர்.

இன்றைக்கு நம்முடைய இருதயங்களும் இல்லங்களும் உடன்படிக்கை பெட்டியைப்போல இருக்கிறது. நாம் தேவ பிரசன்னத்தை பயபக்தியுடன் மதித்து, அவர் தங்குவதற்கு இடமுண்டாக்கும்போது அவர் தயவையும், ஆசீர்வாதத்தையும் அருளுகிறார். நாம் அவரை புறக்கணிக்கும்போது அவரது பாதுகாப்பை இழக்கிறோம்.

சென்னையை சேர்ந்த சகோதரி வசந்தா என்பவரின் வாழ்க்கையை ஆண்டவர் மறுரூபமாக்கிய சாட்சியை உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன். பல ஆண்டுகளாக அவர்களது கணவர் மதுப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்ததால் வீட்டில் சண்டை நடந்துகொண்டே இருந்தது. அவர்கள் மகளுக்கு திருமணமாகி 5 ஆண்டுகள் ஆகியும் குழந்தையில்லை. ஒருநாள் அவர்கள் ஜெப கோபுரத்திற்கு வந்து, தன் குடும்பத்தை தேவனுக்கு அர்ப்பணித்து, ஒழுங்காக ஜெபித்து தியானிக்க ஆரம்பித்தார்கள். அவர்கள் வீட்டுக்குள் தேவனை வரவேற்ற பிறகு, காரியங்கள் மாற தொடங்கின. அவர்கள் கணவர் முற்றிலும் விடுதலையானார். அவர்கள் மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. வீட்டை சமாதானம் நிரப்பியது. அவர்கள் மற்றவர்களுக்காக ஜெபிக்க தொடங்கினார்கள்; அநேகருக்கு ஆசீர்வாதமாக இருக்கிறார்கள். தேவனை தேடி, அவர் வாசம்பண்ணும் ஸ்தலமாக தன் வீட்டை மாற்றினார்கள். அவர் அந்த அர்ப்பணிப்பை கனப்படுத்தினார்.

### ஆயத்தமாகுங்கள்

அன்பானவர்களே, இயேசு சீக்கிரத்தில் வருகிறார். "**இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது**" (வெளிப்படுத்தல் 22:12) என்று வேதம் கூறுகிறது. நாம் தனிப்பட்டவிதத்திலும் குடும்பமாகவும் ஆயத்தமாக இருப்போம்.

உங்கள் வாழ்க்கையை, இல்லத்தை, நேரத்தை, உங்களுக்குரிய யாவற்றையும் ஆண்டவருக்கு அர்ப்பணியுங்கள். அவரது பிரசன்னத்தை நித்தமும் தேடுங்கள். உங்கள் இல்லம், அவரை வரவேற்கின்ற, அவர் பிரியப்படுகிற பரிசுத்த வாசஸ்தலமாக இருப்பதாக. தேவன் உங்கள் குடும்பத்தை தம்முடைய சமாதானத்தினால், ஒருமனப்பாட்டினால், பாதுகாப்பினால், அருட்கொடையினால் ஆசீர்வதிக்க வாஞ்சிக்கிறார். உங்கள் இருதயத்தையும் இல்லத்தையும் இன்று அவருக்கு திறப்பீர்களா?

ராஜா வருகிறார். நாம் இன்னும் பரிசுத்தமாக, இன்னும் அன்பாகவும், இன்னும் அதிகமாகவும் ஆயத்தமாவோம்.




## கோடிக்கணக்கான ஜனங்களின் கண்ணீர் துடைக்கப்படும்படி இயேசு அழைக்கிறார் ஊழியத்தைத் தாங்குவதற்கான வழிகள்

**ONLINE TRANSFER:**

IndusInd Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **555444333222111**
Bank: **IndusInd Bank, Rajaji Salai Branch, Chennai - 600001.** IFS Code: **INDB0000167**

ICICI Bank
Beneficiary Name: **JESUS CALLS**
Account No.: **000901056144**
Bank: **ICICI Bank Ltd., Nungambakkam Branch, Chennai 600 034.**
IFS Code: **ICIC0000009**

*BANK TRANSFER DETAILS CAN BE INTIMATED: partnercare@jesuscalls.org*

QR Code-ஐ ஸ்கேன் செய்து அனைத்து UPI செயலிகள் மூலமும் தாங்கலாம்.

**SCAN TO PAY**

UPI ID **jesuscalls@indus**

மணியார்டர் (EMO) மற்றும் 'JESUS CALLS' என்ற பெயரில் டிமாண்ட் டிராப்ட் / காசோலை (CTS) எடுத்து, ஜெப கோபுரம், 16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை - 600 028 என்ற முகவரிக்கு அனுப்பலாம். உங்கள் பகுதியிலுள்ள ஜெப கோபுரத்திற்கு நேரில் சென்றும் தாங்கலாம்

நீங்கள் வங்கி பரிமாற்றம் மற்றும் வங்கிகளின் செயலிகள் (Apps) மூலமாக நன்கொடை அனுப்பினால், தயவுசெய்து அதைக் குறித்த விவரங்களை உடனே 98409 99923 என்ற எண்ணுக்கு எஸ்எம்எஸ் அல்லது வாட்ஸ்அப் வாயிலாக எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கவும், உங்கள் நன்கொடை வந்து சேர்ந்ததற்கான ஒப்புதலை உங்களுக்குத் தெரியப்படுத்தவும் அது உதவும்.



# பூனா பிரார்த்தனை திருவிழா

## பூனாவிலுள்ள 75 லட்சம் மக்களுக்கு தேவனுடைய அன்பை கொண்டு வருவோம்











மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள பூனா, கல்வி, தொழிற்சாலை, தகவல்தொழில் நுட்பம் என்று அநேக துறைகளை கொண்டுள்ளது. ஆனாலும், மக்கள் மௌனமாக பாடு அனுபவிக்கும் இடமாகவும் உள்ளது. 75 லட்சம் மக்கள் வசிக்கும் இப்பட்டணத்தில் வாலிபர்களின் தொகை மிகவும் அதிகம். அடையாளச் சிக்கல், அடிமைத்தனம், கலக்கம், முறிந்த உறவுகள் ஏராளமாக காணப்படுவதால் பூனாவுக்கு இயேசு தேவை. பூனாவிலிருந்து வரும் ஜெப விண்ணப்பங்கள் மக்களின் இருதயத்தின் கூப்பிடுதலை காட்டுகிறது.

◆ தகவல் தொழில்நுட்ப துறை, தொழிற்சாலை ஆகியவற்றில் பணிபுரியும் ஆயிரக்கணக்கானோர் அழுத்தத்தின் கீழ், தனிமைக்குள், மனச்சோர்வுக்குள் சிக்கிக்கொண்டுள்ளனர்.

◆ அதிகரித்து வரும் விவாகரத்துகளால், உணர்வுப்பூர்வமான விலகலால், வியாதிகளால் குடும்பங்கள் தத்தளிக்கின்றன.

◆ அநேகர் பாரம்பரிய நம்பிக்கைகளில் கட்டுண்டிருக்கின்றனர். வாழ்க்கையை மாற்றும் இயேசு கிறிஸ்துவின் செய்தியை அவர்கள் ஒருபோதும் கேள்விப்பட்டதில்லை. ஆகவேதான் பூனா பிரார்த்தனை திருவிழா, ஒரு நிகழ்ச்சி அல்ல; மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை உண்டாக்குவதற்கு ஒரு தெய்வீக வாய்ப்பாகும்.

### பூனாவில் ஏன் பிரார்த்தனை திருவிழா

* மௌனமாக பாடனுபவிக்கும் ஆயிரக்கணக்கானோருக்கு இயேசுவின் சுகமளிக்கும் வல்லமையை கொண்டு வருதல்
* சந்திக்கப்படாத வாலிபரை, குடும்பங்களை நம்பிக்கை, சமாதானம், இரட்சிப்பு இவற்றுடன் சந்தித்தல்
* இந்தப் பகுதியில் காணப்படும் ஆவிக்குரிய கட்டினை ஐக்கிய பிரார்த்தனை மூலம் உடைத்தல்
* வளரும் பட்டணத்தில், ஜெபிக்கிறவர்கள், ஆத்தும ஆதாயம் செய்கிறவர்களை எழுப்புதல்

### பிரார்த்தனை திருவிழாக்கள் எப்படி வாழ்க்கையை மாற்றுகிறது என்பதை விளக்கும் சிறுசாட்சி:

### பூரண விடுதலை

நான் தனியார் நிறுவனம் ஒன்றில் மானேஜராக வேலை பார்த்தேன். வேலையை உண்மையாய் செய்தேன். திடீரென கடும் காய்ச்சல் வந்தது. சிகிச்சைகள் எடுத்த பிறகு ஒரு மாதமாகியும் காய்ச்சல் குறையவில்லை. நடக்கவே கடினமாக இருந்தது. என்னை வேறொரு மருத்துவமனைக்கு பரிந்துரைத்தார்கள். அங்கே நிணநீர் மண்டல புற்றுநோய் (Lymphoma cancer) என்று கண்டுபிடித்தார்கள். மருத்துவர்கள், நோய் முற்றிய நிலையில் இருப்பதாகவும் (Stage 4) கூறி, இன்னும் 15 நாட்கள்தான் உயிருடன் இருப்பீர்கள். இருக்கும் நாட்களை அனுபவியுங்கள் என்று சொன்னார்கள். அந்த வார்த்தைகள் என்னை உடைத்தன. நான் மனங்கசந்து அழுதேன். எனக்கு சிறுபிள்ளைகள்

இருக்கிறார்கள். அவர்களுக்காகவாவது எனக்கு சிகிச்சை அளியுங்கள் என்று கேட்டுக் கொண்டேன். அவர்கள் ஒத்துக்கொண்டார்கள். ஆனால், "எட்டு சுற்று வேதி சிகிச்சை (chemotherapy) கொடுக்க வேண்டும். ஆனால், நீங்கள் இரண்டை கூட தாங்கமாட்டீர்கள்" என்று எச்சரித்தார்கள். இரண்டாவது சுற்று சிகிச்சைக்கு பிறகு, நான் மருத்துவமனையில் தனியாய் படுத்திருந்தேன். ஆண்டவரிடம் அழுதேன். நான் தூங்கியதும், திடீரென ஒரு குரல் நன்றாக கேட்டது. அது, "என் மகனே, இந்த புற்றுநோய் உன்னை கொல்லாது; ஆனால் என் நாமத்திற்கு மகிமை கொண்டு வரும். நீ எனக்கு ஊழியம் செய்வாய்" என்று கூறியது. அவருடைய குரலால் பெலன் பெற்றேன். எட்டு சுற்று மருத்துவ சிகிச்சையையும் முடித்து பூரண சுகம் பெற்றேன். நான் மீண்டும் சுகம் பெற்றதைக் கண்ட மருத்துவர்களே வியந்துபோயினர். மருத்துவமனையிலிருந்து வெளியே வந்ததும் என்னுடைய வேலையிலிருந்து விலகி, எங்கள் வீட்டிலேயே ஐந்து பேருடன் சிறிய சபையை ஆரம்பித்தேன்.

பிறகு மீண்டும் கடும் காய்ச்சலும் சளியும் வந்தன. நான் மனதளவில் பயந்துபோனேன். அப்போதுதான் அகமத்நகரில் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழா நடக்க இருப்பதை அறிந்து, அதில் கலந்து கொண்டேன். அதில் Dr. பால் தினகரன், "விஸ்வாஸ், தேவன் உங்களை இப்போது தொடுகிறார். அவருடைய ஞானம் உங்கள்மேல் வருகிறது. இருளின், மரணத்தின், பயத்தின் ஆவி அகன்றுபோகிறது. நீங்கள் தேவனுடைய ஊழியராக மாறுவீர்கள்; நன்றாகவும் இருப்பீர்கள்" என்று தீர்க்கதரிசனமாக கூறினார்.

அந்தத் தருணத்திலே காய்ச்சல் என்னை விட்டு அகன்றது. பயத்தையும் விட்டுவிட்டேன். புதிய பெலனோடு ஊழியத்தை தொடர்ந்தேன். இப்போது 750 பேருடன் ஒரு சபைக்கு போதகராயிருக்கிறேன். அநேக புற்றுநோயாளிகள் இயேசுவின் வல்லமையால் சுகம் பெறுகின்றனர். தீர்க்கதரிசனம் நிறைவேறியது. ஆண்டவருக்கே எல்லா மகிமையையும் செலுத்துகிறேன்.

- கோட்டே விஸ்வாஸ், அகமத்நகர்.



**இந்த சாட்சியை போன்று ஆயிரக்கணக்கானோர் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை திருவிழாக்கள் மூலம் அற்புதங்களை பெற்றுள்ளனர்.**

## பூனாவில் உள்ள 75 லட்சம் மக்களை சந்தித்தல்

இயேசுவின் அன்பை அனுபவித்திராத லட்சக்கணக்கான மக்கள் பூனாவில் இருக்கிறார்கள். நீங்கள் காணிக்கை கொடுத்து இந்த பிரார்த்தனை திருவிழாவில் மக்களின் கண்ணீரை துடைப்பதில் எங்களுடன் பங்காளராகும்போது, தொடப்படும் ஆத்துமாக்கள் பரலோகத்தில் உங்கள் கணக்கில் எழுதப்படும். ஆண்டவர் தமது பலனை பூரணமாக உங்கள்மேல் பொழிந்தருளுவார்.

- [ ] ஒரு ஆத்துமாவை சந்தித்து ஆசீர்வதிக்க உதவுவதற்கு காணிக்கை ரூ.1,000/-
- [ ] 100 ஆத்துமாக்களை சந்தித்து ஆசீர்வதிக்க உதவுவதற்கு காணிக்கை ரூ.1,00,000/-
- [ ] 1000 ஆத்துமாக்களை சந்தித்து ஆசீர்வதிக்க உதவுவதற்கு காணிக்கை ரூ.10,00,000/-

**"உங்கள் ஆதரவு வாழ்க்கையை மாற்றும்**

நீங்கள் கொடுக்கும் காணிக்கை பூனாவிலுள்ள மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், தேவனுடைய அன்பினால் அவர்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தவும் நேரடியாக உதவும்.

இந்தக் கூட்டங்களுக்கு கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவாகும். உங்கள் தியாக காணிக்கைகள், இக்கூட்டங்களுக்கும் பூனாவில் ஜெப கோபுர ஊழியத்தை ஸ்தாபிக்கவும் உதவும். ஜெப கோபுரம், மக்களுக்காக ஜெபிப்பதுடன், அவர்களுக்கு தேவையில் உள்ள மற்றவர்களுக்காக ஜெபிப்பதற்கு பயிற்சியும் அளிக்கும்.

மேடை அமைத்தல், ஒலி ஒளி அமைத்தல், பந்தல், இருக்கை வசதி, அபிவிருத்தி பணி, நேரடி தொலைக்காட்சி மற்றும் இணையவழி ஒளிபரப்பு, தொழில்நுட்ப கருவிகள், இணைய இணைப்பு, போக்குவரத்து, உணவு, ஊழியக் குழுவினர், தன்னார்வ ஊழியர்களுக்கு தங்கும் வசதி உள்ளிட்ட அநேக செலவுகள் உண்டு. உங்கள் ஆதரவு, ஜெப கோபுர ஊழியத்தை தாங்குவதோடு 300 ஜெப வீரர்கள், ஸ்தானாபதிகளை எழுப்பி பயிற்றுவிக்கவும் உதவும்.

**வாழ்க்கையை மாற்றும் இந்தக் கூட்டத்திற்காக ஜெபிக்கவும் உதாரத்துவமாக கொடுக்கவும் உண்மையுள்ள விசுவாசிகளை அழைக்கிறோம்.**

**இயேசு, "அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்" என்று கூறியிருக்கிறார் (மத்தேயு 9:37)**

**அறுப்புக்கு வேலையாட்களை அனுப்புவதில் பங்கு பெறுவீர்களா?**

**பூனா பிரார்த்தனை திருவிழாவுக்கு காணிக்கை அனுப்ப QR Codeஐ ஸ்கேன் செய்யவும்.**

# உள்ளத்தின் ஆழத்திலிருந்து பேசுகிறேன்...



ஊழியத்தில் என் உடன் பங்காளரே,

இயேசு அழைக்கிறார் ஊழியத்தின் மூலம் நாம் இணைந்து ஆண்டவருக்கு ஊழியம் செய்யக்கூடிய தெய்வீக பங்களிப்பில் களிகூருகிறேன்; என் இருதயம் நன்றியால் நிறைந்திருக்கிறது. உங்கள் உண்மையான ஆதரவு, “உங்களுக்கு நன்மையுண்டாகும் என்று நீதிமான்களுக்குச் சொல்லுங்கள்; அவர்கள் தங்கள் கிரியைகளின் பலனை அநுபவிப்பார்கள்” (ஏசாயா 3:10) என்று வேதம் கூறுகிறபடி, நீதியுள்ள இருதயத்திற்கு பிரகாசிக்கும் சாட்சியாக இருக்கிறது. நிச்சயமாக, உங்களுடைய தன்னலமற்ற செயல்களுக்கான, அசையாத விசுவாசத்திற்கான திரட்சியான பலனை அறுவடை செய்வீர்கள். நீங்கள் கொடுப்பதும், ஜெபிப்பதும், ஊழியத்தோடு நிற்பதும் கிறிஸ்துவின் இருதயத்தை எதிரொலிக்கிறது; அது, திரளான ஜனங்களுக்கு நம்பிக்கையை, சுகத்தை, இரட்சிப்பை அளிக்கிறது. உங்கள் நீதிக்கு நிச்சயம் பலன் உண்டு.

கடந்த மாதத்தில் உங்கள் நீதியின் பங்களிப்பால் நடந்த மகிமையான ஊழியப்பணிகளை கீழே தந்திருக்கிறேன். இம்மாத முயற்சிகளிலும் கர்த்தரின் கரம் வல்லமையாக விளங்கி, அவரது நாமம் மட்டும் மகிமைப்பட தொடர்ந்து ஜெபிப்போம்.

## துதி குறிப்புகள்:

2025 ஜுலை 13-ம் தேதி, காருண்யா நகரில் Dr.டி.ஜி.எஸ். தினகரன் மையத்தில் சிறப்பு ஆசீர்வாத கூட்டம் நடைபெற்றது. அதில் வல்லமையான அற்புதங்கள் நிகழ்ந்தன. ஆண்டவர் தம்முடைய ஜனங்கள் மேல் தமது அன்பை பொழிந்ததற்காக குடும்பமாய் நாங்கள் அவருக்கு நன்றி செலுத்துகிறோம்.

### ஜெப கோபுர ஊழியம் மூலம் 42 ஆண்டுகள் இடைவிடாத பிரார்த்தனை

**“நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்” (1 தீமோத்தேயு 2:1)**

ஜெப கோபுர ஊழியம் மூலமாக, 42 ஆண்டுகளில், 27 கோடி பேருக்கு பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டுள்ளது. தேசம் முழுவதும் இருக்கும் ஜெப கோபுரங்களுக்கு நேரில் வருகிறவர்கள், தொலைபேசி மூலம் ஜெப கோபுரத்தை தொடர்புகொள்கிற அனைவருக்கும் இரவும் பகலும் நம் ஜெப வீரர்கள் ஆவிக்குரியவிதத்தில் அசையாத அர்ப்பணிப்போடு ஜெபிக்கிறார்கள்.

ஒவ்வொரு ஜெப விண்ணப்பத்தையும் நான் பெற்று, தினமும் அதிகாலையில் ஆண்டவரிடம் மன்றாடுகிறேன். ஜனங்களுக்காக திறப்பில் நிற்கிற இந்த புனிதமான அழைப்பு எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. விசுவாசத்தோடும் மனதுருக்கத்தோடும் ஏறெடுக்கப்படும் பிரார்த்தனைகளால் சுகம், மீட்பு, பிரச்சனைகளுக்கான தீர்வு, இரட்சிப்பு என பல்வேறு ஆசீர்வாதங்களைப் பெற்றவர்களின் சாட்சிகள் தினமும் வருகின்றன.

உங்கள் உதவியால்தான் ஜனங்களின் வாழ்க்கையில் மாற்றத்தைக் கொண்டு வரமுடிகிறது. உண்மையுள்ள உங்கள் ஜெபங்களும், உதாரத்துவமான காணிக்கைகளும் இந்த ஊழியத்தின் முதுகெலும்பாக இருக்கின்றன. உங்கள் பங்களிப்பினால் எண்ணற்றோர் வாழ்க்கை தொடப்படுகின்றன; ஜெபத்தின் வல்லமையால் மறுரூபமாக்கப்படுகின்றன. நாம் இணைந்து நித்தியமாய் மன்றாடும் ஒரு பாரம்பரியத்தை உருவாக்குவோம்.

### வேலை ஆசீர்வாத திட்டம்

**“எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள் மேல் இருப்பதாக; எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்**

**படுத்தியருளும்"** **(சங்கீதம் 90:17)**

ஆகஸ்ட் 17-ம் தேதி வேலை ஆசீர்வாத திட்டம் ஐந்தாம் ஆண்டை நிறைவு செய்கிறது. இத்திட்டம் கணக்கற்ற மக்களுக்கு வேலைவாய்ப்பில் வெற்றியை நோக்கி நடக்க உதவுகிறது. இந்த தெய்வீக முயற்சியால் அநேகர் அற்புதமான திருப்பங்களை, புதிய வேலை வாய்ப்பு, நெடுங்காலமாக காத்திருந்த பதவி உயர்வுகள், சாதகமான பணியிட மாற்றங்கள், வேலையிடங்களில் நியாயம் போன்றவற்றை அனுபவித்து வருகின்றனர்.

இத்திட்டத்தில் இணைவதன் மூலம் வாழ்க்கையில் மறுரூபமடைகின்றனர்; வேலையில் உயர்வு பெறுகின்றனர்; குடும்பங்கள் ஆசீர்வாதம் பெறுகின்றன. வேலை ஆசீர்வாத திட்டத்தை மற்றவர்களுக்கும் அறிமுகம் செய்ய உங்களை உற்சாகப்படுத்துகிறேன். அவர்களுடைய கனவுகள் நனவாக, தேவன் அருளிய திறமைகள் நிறைவேற நீங்களும் ஒரு கருவியாய் விளங்குங்கள். நாம் இணைந்து சமுதாயத்திற்கு ஆசீர்வாதமாக பிரகாசிக்கும் ஒரு தலைமுறையை எழுப்புவோம்.

### தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழு

**"உங்களில் இரண்டுபேர் தாங்கள் வேண்டிக் கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"** **(மத்தேயு 18:19)**

கணவனும் மனைவியும் இணைந்து ஒருமனமாக ஜெபிக்கவேண்டும் என்ற தெய்வீக பாரத்தை மனதில் கொண்டு, என் தாயார் சகோதரி ஸ்டெல்லா தினகரன் 2017-ம் ஆண்டு, ஆகஸ்ட் 5-ம் தேதி, தம்பதியர் எஸ்தர் ஜெபக்குழுவை ஆரம்பித்தார்கள். அது தொடங்கப்பட்ட நாளிலிருந்து, தம்பதியர் ஆண்டவருடைய அழைப்புக்கு கீழ்ப்படிந்து தேசத்திற்காக, குடும்பங்களுக்காக மன்றாடி வருகின்றனர். ஒருமனப்பட்ட ஜெபங்களின் பலனாக, எண்ணற்ற குடும்பத்தினர் ஆசீர்வாதங்களைக் கண்டுள்ளனர்.

### பங்காளர்களை ஜெப வீரர்களாக மறுரூபமாக்குதல்

**"இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்."** **(கொலோசெயர் 4:2)**

ஆண்டவரோடு நடக்கவேண்டும் என்ற ஆழமான வாஞ்சையுள்ளவர்களுக்கும், ஊழியம் செய்யும் அழைப்பை பெற்றவர்களுக்கும் உதவும்வண்ணம் இயேசு அழைக்கிறார் பிரார்த்தனை கலாசாலை உருவாக்கப்பட்டுள்ளது. சான்றளிக்கப்பட்ட பயிற்றுநர்கள், அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் அளிக்கும் படிப்புகள், திடமான வேதாகம அடித்தளத்தையும் நடைமுறை ஊழியப் பயிற்சியையும் வழங்கும்.

பயிற்சி பெற்றவர்கள், ஜெப கோபுரங்களில் தன்னார்வ ஜெப வீரர்களாகவும், ஆண்டவரிடம் பரிந்துபேசும் பாத்திரங்களாகவும் செயல்படுவார்கள். 'இயேசுவை அறிந்துகொள்ளுதல்' என்ற பயிற்சி இணையதளத்தின் மூலம் வழங்கப்படுகிறது. academy.prayertoweronline.org என்ற இணைப்பு மூலம் பதிவு செய்யலாம். +91 63807 52257 என்ற எண்ணில் தொடர்புகொண்டு மேலும் விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

### சிறப்புமிக்க நாட்கள்

ஆகஸ்ட் 21-ம் தேதி, எங்கள் குடும்பத்திற்கு முக்கியமான நாள். அது, என் அம்மா சகோதரி ஸ்டெல்லா தினகரனின் வாழ்க்கையை மாற்றிய தருணம். ஆண்டவர் இயேசுவை அவர்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தன் உள்ளத்தை அவருக்கென்று ஒப்புக்கொடுத்தார்கள். கிறிஸ்துவின்மீதுள்ள அவர்களுடைய உறுதியான அர்ப்பணிப்பு தொடர்ந்து எங்கள் குடும்பத்தினரை ஊக்குவித்து உலகமெங்கும் லட்சக்கணக்கானோரை தொடுகிறது. ஆண்டவருடைய ஊழியத்தை செய்யும் அம்மாவை தொடர்ந்து உங்கள் ஜெபத்தில் தாங்குங்கள்.

**ஜெப கோபுர ஊழியம் மூலமாக, 42 ஆண்டுகளில், 27 கோடி பேருக்கு பிரார்த்தனை ஏறெடுக்கப்பட்டுள்ளது**

ஆகஸ்ட் 15 - நம் இந்திய தேசம் சுதந்திரம் பெற்ற நாள். இந்த நாளில் தேசம் செழிப்பினால் நிறையவும், தெய்வீக பாதுகாப்பு அருளப்படவும், சமாதானம் காக்கப்படவும் ஊக்கமாய் ஜெபிக்கிறேன். இந்திய மக்கள் இயேசுவின் மறுரூபமாக்கும் அன்பை அனுபவித்து, அவரால் மட்டுமே அளிக்கப்படுகின்ற நிறைவான வாழ்வை பெற்றுக்கொள்வார்களாக.

**ஜெப குறிப்புகள்:**

### நடைபெற இருக்கும் கூட்டங்கள்

2025 ஆகஸ்ட் 1 - முழு இரவு அற்புத ஜெப கூட்டம், சென்னை

2025 நவம்பர் 28-30 - மகாராஷ்டிராவுக்கு ஆசீர்வாதம், பிரார்த்தனை திருவிழா, பூனா

மகாராஷ்டிரா பிரார்த்தனை திருவிழாவுக்காக மிகுந்த எதிர்பார்ப்போடு இருக்கிறோம். இங்கு திரள் கூட்டம் வரவேண்டும் என்று ஊக்கமாக ஜெபியுங்கள். பூனாவுக்கு அருகில் வசிக்கும் அன்பானோரை இக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு உற்சாகப்படுத்துங்கள்; அவர்கள் தேவனுடைய சுகமளிக்கும் வல்லமையையும், சமாதானத்தையும், நம்பிக்கையையும் பெற்றுக்கொள்ள உதவுங்கள்.

இந்தக் கூட்டத்திற்கு ஜெபத்துடன் ஆதரவளிக்க முன்வருவீர்களா? உங்கள் பங்களிப்பு, இருளின் மத்தியில் தேவையோடு உள்ள திரளான மக்களுக்கு நம்பிக்கையையும் வெளிச்சத்தையும் கொண்டுவர உதவும். உங்கள் உதார குணம் யாராவது ஒருவருடைய புதிய ஆரம்பத்திற்கு உதவட்டும்.

### புதிய பாடல் வெளியீடு

116-ம் சங்கீதத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட என்னுடைய துதி பாடல், 'கர்த்தரை ஸ்தோத்தரி'. இப்பாடல், நம் வாழ்வில் விளங்கும் ஆண்டவரின் தயையை விளக்குகிறது. இது, என்னுடைய யூடியூப் சேனலில் Paul Dhinakaran 2025 ஜூலை 13-ம் தேதி வெளியாகியுள்ளது. இதைக் கேட்கும்போது தேவனுடைய ஆச்சரியமான கிரியைகளை, உங்களை உயர்த்தும் அவரது கிருபையை, உங்களை தாங்கும் அவரது அன்பை, ஒருபோதும் மாறாத அவரது தயையை நினைவுகூருவீர்கள். மற்றவர்களுக்கும் இதைப் பகிருங்கள்; நாம் இணைந்து அவருடைய நாமத்தை உயர்த்துவோமாக.

**“அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக”** (சங்கீதம் 20:4) என்ற வல்லமையான வாக்குத்தத்தத்தை கூறி இதை நிறைவுசெய்கிறேன்.

ஆண்டவரோடு நீங்கள் உண்மையாய் நடக்கும்போது, உங்கள் விருப்பங்கள் அவருடைய சித்தத்திற்கு ஏற்றதாய் இருக்கும்போது விசுவாசத்துடன் செய்யும் திட்டங்கள் எல்லாம் வாய்க்கும். எல்லா காலங்களிலும் அவரது கரம் உங்களை வழிநடத்தட்டும்; ஆசீர்வதிக்கட்டும்; பக்தியுடன்கூடிய உங்கள் கனவுகளை நனவாக்கட்டும்.

இந்த ஊழியத்தோடு தொடர்ந்து இணைந்து நில்லுங்கள். சந்தோஷத்தையும் பெலனையும் ஆண்டவருக்காக செய்த பிரயாசத்தின் பலனையும் அனுபவியுங்கள்.

இந்தப் பணியில் நீங்கள் சந்தோஷமான பங்காக இருப்பதற்காக உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். நாம் இணைந்து நித்தியத்திற்கான மாற்றத்தை ஏற்படுத்துவோம்.

உங்களுக்காக ஜெபிக்கும் அன்பு சகோதரன்,

Dr. பால் தினகரன்.



# இன்றைய இறை தியானம்




**1** **ஏசாயா 3:10 - நீதிமானுக்கு நன்மை வரும்**
**தியானத்திற்கு:** சங். 58:11; நீதி. 13:21; எரே. 32:39-42; மத். 25:46

**2** **நீதிமொழிகள் 11:30 - ஜீவவிருட்சம்**
**தியானத்திற்கு:** நீதிமொழிகள் 3:18; 13:12; 15:4; வெளி. 2:7

**3** **சங்கீதம் 145:20 - கர்த்தர் நம்மை காப்பாற்றுகிறவர்**
**தியானத்திற்கு:** உபா. 33:12; யோசுவா 24:17; 1 நாளா. 18:6,13; சங். 12:7

**4** **நீதிமொழிகள் 11:25 - கொடுங்கள் கொடுக்கப்படும்**
**தியானத்திற்கு:** மத். 10:41,42; மாற்கு 4:24; லூக்கா 6:38; 2 கொரி. 9:6-8

**5** **சங்கீதம் 140:13 - கர்த்தர் சமுகத்தில் வாசம்பண்ணுவீர்கள்**
**தியானத்திற்கு:** உபா. 33:28; நீதி. 2:21; ஏசாயா 33:16; 65:9; சக. 14:11

**6** **நீதிமொழிகள் 4:18 - நீதிமான்களின் பாதை**
**தியானத்திற்கு:** சங். 1:6; நீதி. 15:19; ஏசாயா 26:7; ஓசியா 14:9

**7** **சங்கீதம் 108:13 - பராக்கிரமம்**
**தியானத்திற்கு:** யோசுவா 17:17; 2 நாளா. 20:6; சங். 60:12; மீகா 3:8

**8** **நீதிமொழிகள் 1:33 - கர்த்தருக்கு செவிகொடுங்கள்**
**தியானத்திற்கு:** உபா. 28:1-14; நீதி. 8:34; லூக்கா 6:27; யோவான் 10:27

**9** **சங்கீதம் 97:10 - தேவன் பரிசுத்தவான்களைக் காப்பாற்றுகிறார்**
**தியானத்திற்கு:** 1 சாமு. 2:9; சங். 37:28; நீதி. 2:8; 1 தெச. 5:23

**10** **யோபு 17:9 - நீங்கள் பலத்திருப்பீர்கள்**
**தியானத்திற்கு:** யாத். 1:7,9; 1 சாமு. 26:25; 2 சாமு. 3:1; சங். 84:7

**11** **சங்கீதம் 92:10 - கர்த்தர் உங்களை உயர்த்துவார்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 37:34; மத்தேயு 23:12; யாக்கோபு 4:10

**12** **யோசுவா 5:9 - கர்த்தர் உங்கள் நிந்தையை நீக்குவார்**
**தியானத்திற்கு:** ஆதி. 30:23,24; நெகே. 2:17,18; ஏசாயா 25:8; எசே. 36:15

**13** **சங்கீதம் 33:12 - கர்த்தர் தெரிந்துகொண்ட ஜனம்**
**தியானத்திற்கு:** 1 நாளா. 16:11-13; யோவான் 15:16; 1 தெச. 1:3,4; 1 பேதுரு 2:4,5

**14** **யோபு 5:10 - தாழ்மையுள்ளவனை கர்த்தர் உயர்த்துவார்**
**தியானத்திற்கு:** சங். 138:6; நீதி. 3:34; மத். 18:2-4; லூக்கா 14:11

**15** **உபாகமம் 32:10 - கண்மணியைப்போல் காக்கும் தேவன்**
**தியானத்திற்கு:** சங்கீதம் 17:8,9; 121:3-8; ஏசாயா 49:16; சகரியா 2:8

**16** **சங்கீதம் 75:10 - நீதிமானின் ஆசீர்வாதம்**
**தியானத்திற்கு:** சங். 112:6; நீதி. 11:28; ஏசாயா 45:25; ஓசியா 14:9

**17** **லேவியராகமம் 26:9 - கர்த்தர் உங்களை கண்ணோக்கிப் பார்க்கிறார்**
**தியானத்திற்கு:** யாத். 4:27-31; 1 சாமு. 1:1-11,20; சங். 14:2; ஏசாயா 63:15-19

**18** **சங்கீதம் 89:15 - கெம்பீர சத்தம்**
**தியானத்திற்கு:** 2 சாமு. 6:15; 2 நாளா. 20:19; சங். 105:42-45; வெளி. 11:15

**19** **யாத்திராகமம் 33:19 - கர்த்தருடைய தயை**
**தியானத்திற்கு:** யாத். 34:6; சங். 102:13; ஏசாயா 55:7; 1 பேதுரு 2:1-3

**20** **பிலிப்பியர் 2:13 - தேவனுடைய சித்தம்**
**தியானத்திற்கு:** எபே. 6:6; கொலோ. 1:27; 1 தெச. 4:3; 5:18

**21** **2 கொரிந்தியர் 5:5 - ஆவியென்னும் அச்சாரம்**
**தியானத்திற்கு:** 2 கொரிந்தியர் 1:22; எபேசியர் 1:14

**22** **அப்போஸ்தலர் 2:28 - கர்த்தருடைய சந்நிதானத்தில் சந்தோஷம்**
**தியானத்திற்கு:** உபாகமம் 12:7,12,18; 1 சாமு. 11:15; 1 தெச. 2:19

**23** **ஏசாயா 12:2 - தேவனே நம் இரட்சிப்பு**
**தியானத்திற்கு:** யாத். 15:2; யோபு 13:16; சங். 25:5; நீதி. 20:22

**24** **அப்போஸ்தலர் 17:28 - கிறிஸ்துவுக்குள் பிழைக்கிறோம்**
**தியானத்திற்கு:** யோவான் 14:19; 2 கொரி. 13:4; கலா. 2:20

**25** **ஆதியாகமம் 21:22 - தேவன் உங்களோடிருக்கிறார்**
**தியானத்திற்கு:** ஆதி. 26:3; யோசுவா 1:5; நியா. 6:12,16; ஏசாயா 43:2,5

**26** **யோவான் 10:11 - கிறிஸ்துவே நல்ல மேய்ப்பன்**
**தியானத்திற்கு:** சங். 23:1; ஏசாயா 40:10,11; யோவான் 10:14,15; எபி. 13:20

**27** **ஓசியா 11:4 - அன்பின் கயிறு**
**தியானத்திற்கு:** ரோமர் 5:5,8; எபே. 2:4,5; 2 தீமோத்தேயு 1:7

**28** **யோவான் 1:51 - வானம் திறக்கப்படும்**
**தியானத்திற்கு:** எசே. 1:1; மத்தேயு 3:16; அப். 7:55,56

**29** **ஏசாயா 62:5 - தேவன் உங்கள்மேல் மகிழ்ச்சியாயிருப்பார்**
**தியானத்திற்கு:** நெகே. 12:43; ஏசாயா 65:19; ஆபகூக் 3:18; செப். 3:17

**30** **2 தெசலோனிக்கேயர் 3:16 - சமாதானத்தின் கர்த்தர்**
**தியானத்திற்கு:** எண். 6:26; சங். 29:11; லூக்கா 24:36; யோவான் 14:27

**31** **ஏசாயா 60:18 - இரட்சிப்பு, துதி**
**தியானத்திற்கு:** சங். 42:5,11; எரேமியா 17:14; அப். 2:47




இன்றைய ஆசீர்வாதத்திற்காக Dr. பால் தினகரன் மற்றும் குடும்பத்தினர் இந்த சத்தியத்தை விளக்கி ஜெபிப்பதைக் காணுங்கள்

இணையதளம் : www.jesuscalls.org
ஃபேஸ்புக்: Jesus Calls Tamil
யூடியூப்: JesusCalls சப்ஸ்கிரைப் செய்திடுங்கள்
ஃபேமிலி சேனல் மொபைல் செயலி
ஃபேமிலி சேனல்: இணையதளத்தில் www.familychannel.org

# தேசிய ஜெப கோபுரம்

“நீ மறுபடியும் அநேக ஜனங்களையும், ஜாதிகளையும், பாஷைக்காரரையும், ராஜாக்களையுங்குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொல்லவேண்டும்” (வெளிப்படுத்தல் 10:11)








இந்தியா 146 கோடி மக்களுடன் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக உள்ளது. டெல்லி, நாட்டின் அதிகார மையமாக இருக்கிறபடியால், தேசத்திற்காக ஜெபிக்கும்படி, தேசிய ஜெப கோபுரத்தை நாடாளுமன்ற கட்டடத்திற்கு எதிரே ஸ்தாபிக்க தேவன் உதவினார். தினமும் இயேசு அழைக்கிறார் தேசிய ஜெப கோபுரத்திற்கு இந்தியா முழுவதிலுமிருந்து,

- தீவிர பொருளாதார சிக்கல்கள்
- வேலைவாய்ப்பின்மை மற்றும் நிரந்தர வேலையில்லாமை
- பிள்ளைகளின் கல்வி மற்றும் எதிர்காலம்
- கட்டுகள், அடிமைத்தனங்கள், ஆவிக்குரிய ஒடுக்குதல்
- புற்றுநோய் உள்ளிட்ட கொடிய நோய்களால் வாடி தெய்வீக சுகம் பெற ஜெப விண்ணப்பங்கள் வந்துகொண்டே இருக்கின்றன

## தேவன் தேசிய ஜெப கோபுரத்தின் வாயிலாக செயல்படுகிறார்

அரசாங்கத்திற்காகவும், மக்களுக்காகவும் ஊக்கமாக இரவும் பகலும் ஜெபம் ஏறெடுக்கப்படுவதால், வல்லமையான அற்புதங்கள் நடக்கின்றன. உங்களுடைய விசுவாசத்தை பெலப்படுத்தும்படியாக தீர்க்கதரிசன நிறைவேறுதல்கள் சில...

2023 அக்டோபர் மாதம் தேசிய ஜெப கோபுரத்தில் ஒரு ஜெப வீரர் மூலமாக இந்தியா முழுவதும் பிரமாண்டமான சாலை அமைக்கும் பணி ஆரம்பமாகும் என்று தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. அதிலிருந்து ஆந்திர பிரதேசம், அஸ்ஸாம், பீகார், சத்தீஸ்கர், ஹரியானா, பஞ்சாப், மத்திய பிரதேசம், கர்நாடகா, ஜார்க்கண்ட், மகாராஷ்டிரா, ஒடிசா, மேகாலயா இன்னும் பல மாநிலங்களில் பணிகள் நடைபெறுகின்றன.

Dr. ஷில்பா சாமுவேல் தினகரன், சகோதரி ஸ்டெல்லா ரமோலா ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்ற தீர்க்கதரிசன வார்த்தை 2024 மார்ச் மற்றும் பிப்ரவரி மாதங்களில் வெளிப்பட்டது. தேவன் தம் வாக்குத்தத்தத்தை கிருபையாக நிறைவேற்றினார். அவரது உண்மைக்காக அவரை துதிப்போம்.

### தேசிய ஜெப கோபுரத்தின் முக்கியத்துவம்

இந்தியாவின் சுதந்திர தினம், ஆகஸ்ட் 15 நெருங்கிக்கொண்டிருக்கும் வேளையில் முழு தேசத்திற்காகவும் ஜெபத்தை ஏறெடுத்து, தேவ வல்லமையின் வீடாக விளங்கும் தேசிய ஜெப கோபுரத்தை நினைவுகூருவோம்.

தேசம் முழுவதிலுமிருந்து இருபது ஜெப வீரர்கள் டெல்லிக்கு வந்து, தேசிய ஜெப கோபுரத்தில் தங்கி தேசத்திற்காக ஜெபிக்கின்றனர்; தீர்க்கதரிசனம் உரைக்கின்றனர்.

அவர்கள் 24 மணி நேரமும் வெவ்வேறு பணி வேளைகளில் அதிகாரத்தின் அரங்கினை பார்த்தவாறு, தேசத்தின் மக்களை பாதிக்கும் பிரச்னைகள் தீர்க்கப்படவும், தேவ ஊழியத்திற்கு வாசல்கள் திறக்கப்படவும், தேசம் முழுவதும் தேவ மகிமை இறங்கவும், தேவனுடைய சித்தம் தேசத்தில் செய்யப்படும்படி, தேச தலைவர்கள்மேல் தேவ ஞானமும் வெளிப்பாடும் இறங்கவும் ஜெபித்து தீர்க்கதரிசனம் உரைக்கிறார்கள். ஜெப வீரர்கள் ஜெபிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அநேக காரியங்களை வெளிப்படுத்துகிறார்; அவர்கள் அந்த தீர்க்கதரிசனங்களைப் பெற்றுக்கொண்டு அவற்றுக்காக ஜெபிக்கின்றனர். இந்தக் குறிப்பிட்ட தீர்க்கதரிசனங்கள் எழுதி வைக்கப்படுகின்றன; தேவன் தமது வேளையில் அவற்றை நிறைவேற்ற உண்மையுள்ளவராயிருக்கிறார் (பிரசங்கி 3:11; ஆபகூக் 2:2,3; எபிரெயர் 10:23).

## தேசத்திற்காக ஏறெடுக்கப்படும் ஜெபத்தில் பங்காளராகுங்கள்

நீங்கள் உதாரத்துவமாக கொடுக்கும் காணிக்கைகளினால், அர்ப்பணிப்புள்ள ஜெப வீரர்களால் ஜெப இயக்கம் நடத்தப்படுகிறது. தேசத்தின்மேல் வரும் ஆசீர்வாதம் உங்கள் வாழ்க்கையிலும் நிரம்பி வழியும். இந்த தெய்வீக பணியில் எங்களோடு இணைந்துகொள்ளுங்கள். நாம் இணைந்து ஒன்றாய் தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிப்போம்.

- ☐ 1 ஜெப வீரரை தாங்குவதற்கு காணிக்கை ரூ.30,000/-
- ☐ 5 ஜெப வீரர்களை தாங்குவதற்கு காணிக்கை ரூ.1,50,000/-
- ☐ 10 ஜெப வீரர்களை தாங்குவதற்கு காணிக்கை ரூ.3,00,000/-

தேசிய ஜெப கோபுரத்திற்கு நீங்கள் காணிக்கை கொடுத்து பங்காளராகும்போது, தேசத்திற்காக ஏறெடுக்கப்படும் பிரார்த்தனைகள் உங்கள் நீதியின் கூப்பிடுதலாக நினைவுகூரப்படும். ஆண்டவர் உங்கள்மேல் பலன்களை பூரணமாய் பொழிந்திடுவார்.

உங்கள் தியாகமான காணிக்கைகள் மூலமாக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், வாடகை, பராமரிப்பு, ஊதியம் உள்ளிட்ட பல செலவுகள் சந்திக்கப்படுகிறது.

தேசத்திற்கு க்ஷேமத்தையும் நம்பிக்கையையும் கொண்டு வரும் இந்தப் பணியில் பங்காளராகும்படி ஜெபத்துடன் உங்களை அழைக்கிறோம். நீங்கள் அளிக்கும் ஆதரவு ஜெபத்தின் வாயிலாக தேசம் முழுமைக்கும் மறுரூபமாகுதலை உண்டாக்க உதவும்.




**பெரிய மாறுதலை உண்டாக்க தன்னார்வலர்கள் தேவை!**

இந்தியா முழுவதுமுள்ள மக்களை சந்திக்க
350 ஜெப வீரர்கள், ஸ்தானாபதிகள், வாலிபர் ஊழிய தலைவர்கள்
மற்றும் நற்செய்தியாளர்களை நியமிக்க வேண்டும்.

ஜெப கோபுரத்தில் தன்னார்வ ஊழியம் செய்யும்படி ஆண்டவர் உங்களை அழைப்பாரானால்
எங்கள் குழுவினரோடு இணைந்து தேசத்திற்கு ஆசீர்வாதத்தை கொண்டு வாருங்கள்.

**நாம் எழுந்து கட்டுவோம் வாருங்கள்**

காணிக்கை அளிப்பதற்கான வழிகள்: இணையதளம்: www.jesuscalls.org
அல்லது QR codeஐ ஸ்கேன் செய்து பாதுகாப்பான முறையில் நன்கொடை செலுத்தலாம்
தன்னார்வ ஊழியம் செய்வது குறித்து மேலும் விவரங்களை ஜெப கோபுர மேலாளரை
காலை 8 முதல் இரவு 8 மணி வரை தொடர்புகொண்டு தெரிந்துகொள்ளலாம் அல்லது
volunteer@jesuscalls.org என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.

**"கண்ணீரோடே விதைக்கிறவர்கள் கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" (சங்கீதம் 126:5)**

**நம் தேசத்தின் மக்களுக்கு தம் அன்பையும் வல்லமையையும் நோக்கத்தையும் அளிக்கும் பணியில் இணையும் உங்களை தேவன்தாமே பூரணமாய் ஆசீர்வதிப்பாராக.**



அன்பு நண்பரே,
இம்மாதத்திற்காக சந்தோஷப்படுங்கள்;
ஆண்டவரை ஸ்தோத்திரியுங்கள்.
வாலிபர்களாக நாம், தேவனை நம்
பக்கத்தில் வைத்தவர்களாக பலன்
பெற்று வளரவேண்டும். இம்மாதம்
ஆண்டவர் இருதயத்தின்
விருப்பங்களை நிறைவேற்றுவேன்
என்ற அருமையான
வாக்குத்தத்தத்தை தருகிறார்.

# விருப்பங்கள் நிறைவேறும்

– சகோ. சாமுவேல் தினகரன்

வாலிபர் பகுதி

ஆம், இது வாக்குத்தத்தம் நிறைவேறும் காலம். உங்களுக்கு இருதயத்தில் பெருவிருப்பங்கள் இருக்கும். ''ஆண்டவரே, இது நிறைவேறினால் நன்றாக இருக்கும்'' என்று நீங்கள் ஜெபித்துக்கொண்டும் இருக்கலாம். தேவன் உங்கள் இருதயத்தின் விருப்பத்தைக் காண்கிறார்.

ஒரு சிறுபெண் ஒருமுறை தன்னுடைய படுக்கை அறையிலிருந்து, ''ஆண்டவரே, எனக்கு ஒரு புது சைக்கிளை தாரும். தயவுசெய்து இப்போதே தாரும்'' என்று சத்தமாக ஜெபித்தாள். அவளுடைய அம்மா விரைந்து வந்து, ''ஏன் சத்தம் போடுகிறாய்? ஆண்டவருக்கு நீ கூறுவது கேட்கும். நீ சத்தம் போட தேவையில்லை'' என்று கூறினார்கள். ஆனால், அந்தச் சிறு பெண் வெகுளியாக, ''ஆண்டவருக்கு கேட்கும் என்பது எனக்கு தெரியும். ஆனால், உங்களுக்குக் கேட்காதே. உங்களுக்குக் கேட்காவிட்டால் எனக்கு எப்படி சைக்கிள் கிடைக்கும்?'' என்று கூறினாள்.

சிறுபிள்ளையைப்போன்ற விசுவாசம்! ஆனால், பரலோகத்திலிருக்கிற நம் தேவன் செவிகொடுத்து, தாமதிக்காமல் பதிலளிக்கிறார். நம்முடைய கூப்பிடுதலுக்கு அவர் செவிகொடாமல் இருப்பதில்லை. உங்களுக்கு மிகச் சிறந்ததைக் கொடுத்து மகிழ்ச்சிப்படுத்த விரும்புகிறார்.

**''அவர் உமது மனவிருப்பத்தின்படி உமக்குத் தந்தருளி, உமது ஆலோசனைகளையெல்லாம் நிறைவேற்றுவாராக'' (சங்கீதம் 20:4)** என்று வேதம் கூறுகிறது.

இயேசு வந்து, சிறிதும் பெரிதுமான நம் விருப்பங்களைக் கண்டு அவற்றை நிறைவேற்றி வைப்பது எவ்வளவு அருமையான விஷயம்!

### நீண்டகால விருப்பங்கள்

நீண்டகாலமாக உங்களுக்கு ஒரு வாஞ்சை இருக்கலாம். ஒருவேளை நீங்கள், முறிந்த ஓர் உறவு சீர்ப்படவேண்டுமென்று, உங்கள் அப்பா குடும்பத்துக்கு திரும்பவேண்டுமென்று, நெடுங்காலமாக வாட்டும் வியாதியிலிருந்து சுகம் கிடைக்கவேண்டுமென்று, வாழ்க்கையில் திருமணம், படிப்பு, வேலை என்று புதிய அத்தியாயத்தை ஆரம்பிக்க ஜெபித்துக்கொண்டிருக்கலாம். ஒரு வேளை நீங்கள், ''ஆண்டவரே, எவ்வளவு காலம்?'' என்று கேட்டுக் கொண்டிருக்கலாம்.



இன்றைக்கு நீங்கள், ''ஆண்டவரே, என் குடும்பத்தில் சமாதானத்தைக் கொண்டுவரவும், என்னுடைய

samuel@jesuscalls.org samueldhinakaranofficial

நிலையை சரிப்படுத்தவும், என் இல்வாழ்க்கையை சீர்ப்படுத்தவும் நான் எவ்வளவோ முயற்சித்துவிட்டேன். இப்போது அதை உம்மிடம் ஒப்படைக்கிறேன்'' என்று உங்கள் விருப்பத்தை அவருடைய கரங்களில் ஒப்படையுங்கள்.

**''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'' (பிலிப்பியர் 4:6)** என்று வேதம் சொல்லுகிறது.

உங்கள் விருப்பத்தை ஜெபத்தின் மூலமாக தேவனிடம் ஒப்படைத்து, அவரை ஸ்தோத்திரியுங்கள். தேவனை ஸ்தோத்திரிப்பது அவர்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையைக் காட்டும். ''ஆண்டவரே, நீர் இப்போது காரியத்தை எடுத்துக்கொண்டீர் என்பதை அறிந்திருக்கிறேன். இனிமேல் நான் கவலைப்படமாட்டேன்; பாரப்படமாட்டேன். இப்போது நீர் செயல்படவேண்டிய நேரம்'' என்று சொல்லுங்கள். உண்மையாகவே, ஆண்டவர் அதை நிறைவேற்ற வல்லவராயிருப்பார். தொடர்ந்து அவரை ஸ்தோத்திரியுங்கள்.

### வேண்டியவை இல்லாத நிலை

நீங்கள் மனந்தளர்ந்து, ''ஆண்டவரே, இது நடப்பதற்கு போதுமான பணம், தொடர்புகள், வாய்ப்புகள் எதுவும் என்னிடம் இல்லை. இது எப்படி நடக்கும்?'' என்று கேட்கலாம்.

அந்தப் பையனிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் மாத்திரமே இருந்தது என்பதை மறந்துபோகாதீர்கள். தன்னிடம் இருந்த குறைவானதையே அவன் இயேசுவிடம் கொடுத்தான். இயேசு புன்னகையுடன் அதை பெற்றுக்கொண்டு, அதை ஆசீர்வதித்தார்; ஆயிரக்கணக்கானோர் சாப்பிடும்படி அதை பெருகப்பண்ணினார். அதுதான் விசுவாசத்தின் வல்லமை.

உங்களிடம் இருக்கும் கொஞ்சத்தைக் கொண்டு ஆரம்பியுங்கள். எல்லாமே பூரணமாக கிடைக்கும் வரை காத்திருக்காதீர்கள். தேவன் உங்களுக்கு ஏற்கனவே கொடுத்திருக்கும் சிறியதை பயன்படுத்துங்கள். நீங்கள் விசுவாசத்தோடு செயல்படும்போது, ஏற்ற காலத்தில் வேண்டியவற்றை கூடுதலாக ஆண்டவர் தருவார்.

### தகுதி குறைவு

சிலவேளைகளில், ''ஆண்டவரே, இதை நிறைவேற்றுவதற்கான தாலந்து என்னிடம் இல்லையே!'' என்று நீங்கள் சொல்லலாம். இங்கே ஓர் இரகசியம்: இயேசு தம் உலகப்பிரகாரமான பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார்;

குறுகிய கால பலன்களை தியாகம் செய்வது எதிர்காலத்தில் பெரிய பலன்களை தரும்

அதனால் அவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் வளர்ந்தார் என்று வேதாகமம் கூறுகிறது (லூக்கா 2:52). கீழ்ப்படிதல், வளர்ச்சியைக் கொண்டு வருகிறது என்பதை இவ்வசனம் நினைவுபடுத்துகிறது.

தேவன் தம்முடைய சித்தத்திற்கு இசைந்திருக்கிற இருதயத்தை நேசிக்கிறார். உங்கள் விருப்பங்கள் தேவனுடைய திட்டத்தில் வேரூன்றியிருந்தால் சந்தோஷம் இயல்பாகவே பாய்ந்தோடும். ஆனால் உங்கள் விருப்பமானது முற்றிலும் சுயத்தின் அடிப்படையில் இருந்தால், நீங்கள் சந்தோஷத்தைக் காண கடுமையாக முயற்சிக்கவேண்டும். பிதாவின் சித்தத்திற்கு இசைந்திருப்பதை விரும்புங்கள்; அவை நிறைவேற, அவர் உங்களை வழிநடத்துவதைக் காணுங்கள்.

தேவன், உங்களையோ, உங்கள் பெற்றோரையோ, பெரியவர்களையோ வழிநடத்துவதற்கு பயன்படுத்தக்கூடும். சிலநேரங்களில் அவர்கள் கூறுவது உங்கள் தனிப்பட்ட விருப்பங்களோடு முரண்படலாம். ஆனால், கீழ்ப்படிவது கடினமாக இருந்தாலும், அவை நீண்டகால ஆசீர்வாதங்களை கொண்டு வரும். குறுகிய கால பலன்களை தியாகம் செய்வது எதிர்காலத்தில் பெரிய பலன்களை தரும். கீழ்ப்படியும்போது தயவை பெற்றுக்கொள்வோம்.

அன்பானவர்களே, தேவனை நம்புங்கள். உங்கள் விருப்பங்களை அவருடைய கரங்களில் ஒப்படைத்து, விசுவாசத்துடன் ஜெபியுங்கள்; அவை நிறைவேறுவதற்கு முன்னரே ஸ்தோத்திரிக்க தொடங்குங்கள். ஒருமுறை மட்டும் அப்படி செய்யாமல் மாதம் முழுவதும் இடைவிடாமல் தொடந்து ஸ்தோத்திரியுங்கள்.

தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறபடியினால், இந்த மாதம் உங்கள் விருப்பங்கள் நிறைவேற ஆரம்பிக்கும் மாதமாக அமையும். அவர் உங்களைக் கைவிடமாட்டார். உங்கள் மிகுந்த விருப்பங்களை தேவன் வாழ்வில் நிறைவேற்றுவதைக் காணுங்கள்.





# கர்த்தருடைய கிரியையிலே பெருகுங்கள்!

- சகோதரி ஸ்டெல்லா தினகரன்

**"கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவா யிராதென்று அறிந்து, நீங்கள் உறுதிப்பட்டவர் களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக."** (1 கொரிந்தியர் 15:58)

தேவன் இவ்வுலகில் ஒன்றுமில்லாமையிலிருந்து சர்வத்தையும் சிருஷ்டித்தவர் என்று வேதத்தில் நாம் தெளிவாக வாசிக்கிறோம். தேவன், உண்மையாய் தம்மை தேடின மனிதனாகிய நோவாவின் வாழ்வில், அவனுக்குண்டான யாவும் ஜலப்பிரளயத்தினால் அழிந்து போன நிலைமையிலும், "நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்" என்று தேவன் அவர்களை ஆசீர்வதித்து பெருகச் செய்தார் (ஆதியாகமம் 9:1,7). மேலும், ஆதியாகமம் 22:17-ல், தேவன் தம்முடைய தாசனாகிய ஆபிரகாமை நோக்கி, "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை பெருகவே பெருகப் பண்ணுவேன்" என்று, அவன் குறைவுபட்டிருந்த நிலையில் ஆசீர்வதித்ததோடு, அவ்வாறே அது அவனது வாழ்வில் நிறைவேறவும் கிருபைபுரிந்தார் (மத்தேயு 1:1-17).

இன்றைக்கும் பிரியமானவர்களே, உங்கள் வாழ்வில் பற்பல குறைவுகள் இருப்பதால், உங்கள் இல்லாமையைக் குறித்து நீங்கள் கலங்கிக்கொண்டிருக்கலாம். ஆபிரகாம், நோவா போன்ற பக்தர்கள் அத்தகைய வேளைகளில் தேவாதி தேவனை உறுதியாய் பற்றிக்கொண்டு பெருகியதுபோல, நீங்களும் ஆசீர்வாதம் பெற செய்ய வேண்டியது இன்னதென்று பார்ப்போமா?

## விசுவாசத்தில் பெருகுவீர்கள்

**"நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகு வீர்களாக"** (கொலோசெயர் 2:7)

**"நமது விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"** (1 யோவான் 5:4)

**"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்"** (ரோமர் 1:17; கலாத்தியர் 3:11; எபிரெயர் 10:38; ஆபகூக் 2:4)

**"நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளை கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளை யெல்லாம் பெறுவீர்கள்"** (மத்தேயு 21:22)

குழந்தையற்றவனாயிருந்த ஆபிரகாம் கர்த்தர்மீதும், அவர் தனக்கு அருளிய வாக்குத்தத்தத்தின்மீதும் முழு விசுவாசம் வைத்து, தன் முதிர் வயதிலே மகன் ஈசாக்கைப் பெற்றெடுத்து ஆசீர்வாதம் பெற்றான் (ரோமர் 4:17-21). அதேபோல, தன்னுடைய குடும்ப வாழ்க்கையில் சகல ஆசீர்வாதங்களையும் முற்றிலுமாக இழந்த நிலை மையிலிருந்த யோபு, "நான் சோதிக்கப்பட்ட பின்பு பொன்னாக விளங்குவேன்" (யோபு 23:10) என்று, தேவன்மீது தன் முழு விசுவாசத்தையும் வைத்து, அதின்பலனாக அவரிடத்திலிருந்து இரண்டு மடங்கான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டான் என்று வேதத்தில் வாசிக்கிறோம் (யோபு 42:10). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து வாழ்ந்த காலத்திலும்கூட, ஒரு பெண் தன்னுடைய சரீரத்தில் பன்னிரெண்டு வருஷமாய் பாடுபட்ட உதிரத்தின் ஊறலினின்று விடுதலை பெறும்படி, ஆண்டவர் இயேசுவிடம் ஓடி வந்தாள். மாற்கு 5:27-ல் நாம் வாசிப்பதுபோன்று, "நான் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்" என்று முழு இருதயத்தோடு அவரை விசுவாசித்து, அவ்வாறே அவள் அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். "உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று. அந்த வேதனை நீங்கி அவள்

ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந் தாள்" (மாற்கு 5:29). ஆண்டவரும் அவளைப் பார்த்து, "மகளே, உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வேதனை நீங்கி சுகமா யிரு" என்று அவளை ஆசீர்வதித்தார்.

ஆம் பிரியமானவர்களே, இன்றைக்கும் அவ்வாறே கர்த்தர் மீதும், அவருடைய வார்த்தையின்மீதும் தங்கள் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வைக்கிறவர்கள், அவரிடமிருந்து உடனடியாக அற்புதத்தையும், ஆசீர்வா தத்தையும் பரிபூரணமாகப் பெற்றுக்கொள்வது நிச்சயமான காரியமாகும்.

எங்கள் குடும்ப வாழ்வின் ஆரம்ப நாட்களில், பல்வேறு விதங்களில் நாங்கள் சோதிக்கப்பட்டோம். 1969-ம் ஆண்டு, என் கணவர் சகோதரர் டி.ஜி.எஸ். தினகரன் அவர்களுடைய இரண்டு நுரையீரல்களும் பழுதடைந்து, இரவும் பகலும் இருமல் மற்றும் ஜுரத்தினால் அவர் மிகுந்த பாடுபட்டார். ஒருநாள் வைத்தியர் என்னிடம், "உங்கள் கணவர் மரணத்திற்கு மிகவும் சமீபமாய் இருக்கிறார்" என்று கூறினார். இதைக்கேட்ட நான், என்னுடைய அறைக்குள் சென்று, முழங்கால்படியிட்டு, இரண்டு கைகளையும் வானத்திற்கு நேராக உயர்த்தி, கர்த்தரை நோக்கிக் கதறினேன். அப்பொழுது ஆண்டவர் என்னோடு பேசினார். "மகளே, உன் கணவர் உயிரோடு எழுந்திருப்பான்" என்பதுதான் அவர் கூறிய காரியம். "ஆண்டவரே என்னிடம் பேசிவிட்டார்; நிச்சயம் என் கணவர் நற்சுகம் பெறுவார்" என்று பலத்த விசுவாசம் எனக்குள் எழும்பியதால், அன்று முதல் நான் கர்த்தரை முழுமனதோடு ஸ்தோத்திரிக்க ஆரம்பித்தேன். கர்த்தர் கொஞ்சம் கொஞ்சமாக அந்த வியாதியின் வேதனை யிலிருந்து அவருக்கு விடுதலை கொடுத்து, பின்பு அற்புதமான விதத்தில் பரிபூரண சுகத்தோடு அலுவலகம் செல்லவும் கிருபை புரிந்தார். இதினிமித்தம், கர்த்தர்மீது எனக்கு இருந்த விசுவாசம் வளர்ந்து பெருகியது. அதன்பிறகும், இயேசு அழைக்கிறார் ஊழியம் வளர்ந்து கொண்டே போன நிலையில், பல்வேறு பாடுகளையும், உபத்திரவங்களையும் நாங்கள் சந்திக்க நேர்ந்தபொழு தெல்லாம் கர்த்தர் எங்களுக்குள் பெருகச்செய்த "விசுவாசமானது", அந்த பாடுகளையும், உபத்திரவங் களையும் எளிதாகக் கடந்துசெல்லும் கிருபையை அதிகமாக அருளியதோடு, அப்படிப்பட்ட பாடுகளின் வழியாகக் கடந்துசெல்கிற மற்ற அநேக ஊழியர்களை, அவர்கள் சோர்ந்துபோகிற வேளைகளில் உற்சாகப் படுத்தவும்கூட பேருதவியாக இருந்தது.

## ஸ்தோத்திரத்தினால் கிருபை பெருகும்

**"தேவனுடைய மகிமை விளங்குவதற்கேதுவாக கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே**




**பெருகும்படிக்கு, இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது"** (2 கொரிந்தியர் 4:15)

**"இஸ்ரவேலின் தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர்"** (சங்கீதம் 22:3)

என்றும்,

**"கர்த்தரை துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக் கிறது"** (சங்கீதம் 147:1)

என்றும் நாம் வேதத்தில் வாசிக்கிறோம்.

**"நீங்கள் சம்பூரணமாக சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவ தில்லை"** (யோவேல் 2:26)

என்று நாம் வேத புத்தகத்தில் வாசிப்பதுபோன்று, கர்த்தர் நம்மை நடத்தி வருகிற விதங்களை எண்ணிப்பார்த்து, அவரை நன்றியோடு ஸ்தோத்திரிக்கையில், "நாம் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போகாதபடி" அவர் நமக்கு அருள்புரிவார்.

தேவனுடைய ஊழியத்தை பயபக்தியோடு செய்து வந்த பவுலும், சீலாவும் கடந்துசென்ற உபத்திரவத்தின் பாதை மிகவும் கொடூரமானது. ஒருசமயம் இவ்விதமாக, கொடூரமாகப் பாடுபட்டு சிறையில் அடைக்கப்பட்டு, வேதனை நிறைந்திருந்த அந்த நடு இராத்திரி வேளையில் அவர்கள் செய்த காரியம் என்ன தெரியுமா? அவர்கள் வேதனை தாங்க முடியாமல் புலம்பிக்கொண்டு அழுது கொண்டிராமல், தேவனை நோக்கி ஜெபம்பண்ணி அவரை துதித்துப் பாடினார்கள் (அப்போஸ்தலர் 16:25). அதை காவலில் வைக்கப்பட்டிருந்த மற்றவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சடுதியிலே சிறைச் சாலையின் அஸ்திபாரங்கள் அசையும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. கதவுகள் திறந்து, கட்டுகள்




யாவும் கழன்றன. இந்த அற்புதத்தைக் கண்ட அந்த சிறைச்சாலை அதிகாரி, அன்று இரவிலே குடும்பமாக இரட்சிப்பைப் பெற்று கர்த்தரை தங்களுக்கு சொந்தமாக ஏற்றுக்கொண்டார்கள்.

அருமையானவர்களே, நீங்களும்கூட இப்படிப்பட்ட துன்பத்தின் வழியே கடந்து செல்லும்பொழுது, கர்த்தரை துதித்துப்பாருங்கள். நீங்களும் அற்புதங்களைக் காண்பீர்கள்.

என்னுடைய ஆவிக்குரிய வாழ்வின் ஆரம்ப நாட்கஎில், நான் தனிமையாயிருக்கும் வேளைகளிலெல்லாம், எத்தனை மணியாக இருந்தாலும் முழங்காலில் நின்று, கர்த்தரை முழு இருதயத்தோடு பாடித் துதிப்பேன். அப்பொழுது, தேவ பிரசன்னம் என்னை முழுவதுமாய் நிரப்பி, கிறிஸ்துவுக்குள் பெலனடைய செய்து, அவருடைய ஆனந்தப் பரவசத்தினால் நான் நிரம்பும் தெய்வீக பாக்கியத்தை என் வாழ்வில் அனுபவித்திருக்கிறேன்.

இதினிமித்தம்தான் தாவீது, "இஸ்ரவேலின் துதிகளுக்குள் வாசமாயிருக்கிற தேவரீரே பரிசுத்தர்" (சங்கீதம் 22:3) என்றும், "கர்த்தரை எக்காலத்தும் நோக்கிப்பார்த்து, எப்பொழுதும் ஸ்தோத்திரம் செய்யும்பொழுது, நம்முடைய முகங்கள் வெட்கப்படாமல், பிரகாசம் அடையும்" (சங்கீதம் 34:5) என்றும் பயபக்தியோடு அனுபவித்து எழுதியிருக்கிறான்.

அருமையானவர்களே, நீங்களும்கூட தனிமையாய் தள்ளப்படுகிற வேளைகளிலும், வேதனையின் உச்சக் கட்டத்தில் தவிக்கிற வேளைகளிலும் கர்த்தரை முழு உள்ளத்தோடு பாடித் துதியுங்கள். அப்பொழுது அவர் உங்கள் வாழ்விலுள்ள துக்கத்தையெல்லாம் சந்தோஷமாக மாற்றுவார். தேவ பிரசன்னம் உங்களை அளவில்லாமல் நிரப்பும். உங்கள் கட்டுகள் யாவும் அறுந்து போகவும், அற்புதங்கள் நடக்கவும் அருள்புரிவார்.

## பரிசுத்த ஆவியின் பலம்

**"பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக"** (ரோமர் 15:13)

பிரியமானவர்களே, உங்களுடைய வாழ்க்கை கிறிஸ்து அருளுகிற தெய்வீக சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நிரம்பியிருக்குமானால், இதைவிட பாக்கியம் நிறைந்த வாழ்வு வேறு என்னவாக இருக்க முடியும்? இன்றைக்கு, மக்கள் தங்களுடைய வாழ்க்கையில் தெய்வீக சமாதானம் இல்லாமையால் செய்வதறியாமல், தற்கொலை செய்துகொண்டு, தங்கள் வாழ்க்கையை முடித்துக்கொள்கிறார்கள். ஆனால் வேதம் சொல்லுகிறது என்னவெனில்,

**"சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது"** (சங்கீதம் 34:10)

இதை நாம் எப்பொழுது, எப்படி பெற்றுக்கொள்ள முடியும்? அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகம், இரண்டாம் அதிகாரத்தில், இயேசுவோடு இருந்த சீஷர்கள், அவருடைய வழிநடத்துதலின்படியே, பரிசுத்த ஆவியின் பலத்தினால் நிரம்பப் பெற்றார்கள் என்று வாசிக்கிறோம். அதன்பிறகு, அவர்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் எவ்வளவாய் அவர்கள் பெலனடைந்து, நம்பிக்கையில் பெருக்கமடைந்து, அநேகருக்கு ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும், இயேசுவைப்போல் பக்தி வைராக்கியத்தோடு வாழ்ந்தார்கள். இதைத்தான், 1 பேதுரு 1:8-ல், "சொல்லி முடியாததும், மகிமை நிறைந்ததுமான தெய்வீக சந்தோஷம் நம்மை நிரப்பும்" என்று வாசிக்கிறோம்.

## அவர்கள் எப்பொழுது நிரப்பப்பட்டார்கள்?

**"அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும், அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார் கள்"**

(அப்போஸ்தலர் 1:14)

அப்போஸ்தலர் 2:1-லும் அதைத்தான் நாம் வாசிக்கிறோம். அவர்கள் ஆண்டவர் இயேசுவைப்போல் வல்லமையினாலும், மகிமையினாலும் நிரம்பப் பெற்றார்கள் (அப்போஸ்தலர் 2:4) என்று வேதம் கூறுகிறது.

இயேசு அழைக்கிறார் ஊழியம் பிறந்த வழியும் இதுவேதான். நீங்களும் குடும்பமாக அல்லது பெண்களாக, வாலிபர்களாக ஒன்றாகக்கூடி ஜெபத்துடன் தேவ சமுகத்தில் காத்திருங்கள். கர்த்தர் உங்களையும் தமது பரிசுத்த ஆவியின் பலத்தினால் நிரப்பி, அவருடைய மகிமை உங்களிலிருந்து வெளிப்படும்படி செய்வார். அவ்வாறே நீங்களும் தனித்தனியாகவும், குடும்பம் குடும்பமாகவும் கர்த்தருடைய கிரியையிலே இவ்விதமாக பலுகிப் பெருகி ஆசீர்வாதம் பெறவும், அதேபோன்று உங்கள் மூலம் அநேகர் நிறைவான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளவும் தேவன் கிருபைபுரிவார்.

# ஜிம் & ஜெமி

















**கதையின் நீதி:**
விளையாட்டு உடலுக்கு பெலனையும் வாழ்க்கைக்கு ஒழுக்கத்தையும் கொடுக்கும்

மனப்பாட வசனம்:
**"சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது"**
(1 தீமோத்தேயு 4:8)

Karunya
DEEMED UNIVERSITY
SOLVING HUMAN PROBLEMS
NAAC Accredited A++

# "Karunya University Commemorates 31st CONVOCATION 2025 with Pride and Excellence"




31st CONVOCATION

Accreditation: A++ NAAC (A++ Grade) · NBA National Board of Accreditation (Engineering and Management Programs) · ACCA (B. Com and Management Programs) · ICAR (B.Sc. (Hons.) Agriculture Program)

India Rating: QS I-GAUGE Platinum

Global Ranking: THE World University Rankings 2025 1201-1500 Band

CATEGORY 1 Institution UGC GoI.

Highest CTC of ₹71 LAKHS PER ANNUM

Academic Collaborations: PHOENIX Phoenix Medical Systems (P) Ltd · Google · suez · AMARON · edveon · FESTO · Microbiological Laboratory · ZOHO

Karunya University, located in the serene foothills of the Western Ghats, celebrated its 31st Convocation Ceremony on July 12, 2025, with great splendour and academic pride.

The Chancellor, Dr. Paul Dhinakaran, in his inspiring address, emphasized the university's commitment to driving technological innovation and societal transformation through value-based education. He encouraged graduates to become ethical leaders and change-makers, blending excellence in their professions with compassion for the world around them. He also presided over the awarding of degrees, medals, and special honours.





Printed by G.L.B.Ernest and Published by G.L.B.Ernest on behalf of Jesus Calls and Printed at Rasi Graphics Private Limited, DP 69-71-A, Sidco Industrial Estate, Thirumazhisai, Poonamallee Taluk, Thiruvallur District. and published at 16, Dr. D.G.S. Dhinakaran Salai, Chennai - 28, Editor: G.L.B.Ernest





The ceremony was graced by the Honourable Chief Minister of Mizoram, **Shri Lalduhoma,** who served as the Chief Guest. In his convocation address, Shri Lalduhoma praised Karunya as a model of faith-driven education and technological progress, urging graduates to let purpose guide their lives and to act as agents of positive change.






The Chief Guest Honourable Chief Minister of Mizoram, **Shri Lalduhoma,** was conferred with the Degree of Doctor of Letters *(Honoris Causa)* in recognition of his exemplary public service and visionary leadership.



In a touching gesture, the graduating students immediately extended support to individuals with disabilities by donating assistive devices and wheelchairs. This act showcased their commitment to creating a positive impact.



Karunya Deemed University's 31st Convocation embodied academic excellence, social responsibility, and compassion. Equipped with their degrees, the graduates are empowered to tackle the world's pressing challenges and make a significant difference in the society.



## 'Caps in the Air: Press Release Highlights'



Scan QR Code to Start the Admission Process

**Programs Offered:**

ENGINEERING | AGRICULTURE | MANAGEMENT | ARTIFICIAL INTELLIGENCE
COMMERCE | FORENSIC SCIENCE | DIGITAL SCIENCES | HEALTH SCIENCES | MEDIA | ONLINE MBA

**ADMISSIONS 2025**
**Closing Soon**

**Karunya Institute of Technology and Sciences,**
Karunya Nagar, Siruvani Main Road, Coimbatore - 641 114. Tamil Nadu, India.
E-mail: admissions@karunya.edu • Website: www.karunya.edu
**Toll Free: 1800 88 99 888, 1800 42 54 300**

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418

உங்கள்
விடுதலைக்காகவும்
செழிப்புக்காகவும்

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும்

வாருங்கள்; எங்களோடு ஜெபியுங்கள்

# முழு இரவு அற்புத ஜெப கூட்டம்



1 ஆகஸ்ட்
வெள்ளி
இரவு 10 முதல்
சனி அதிகாலை
5 மணி வரை



ஜெபத்தை நடத்துகிறவர்கள்:

**Dr. பால் தினகரன் குடும்பத்தினர்**

மற்றும் அபிஷேகம் பெற்ற தேவ ஊழியர்கள்

இடம்:

**சகோ. டி.ஜி.எஸ். தினகரன் ஜெப கோபுரம்**

**16, டி.ஜி.எஸ். தினகரன் சாலை, சென்னை 28.**

இந்த ஜெபத்தின் மூலம் அநேகர் ஆசீர்வாதம் பெற்றிருக்கின்றனர். குடும்பமாக வந்து பாக்கியம் பெறுங்கள்.

மேலும் விவரங்களுக்கு: 044 - 23456630, 6381754514

இந்த முழு இரவு ஜெபம் தேசம் முழுவதும் இருக்கும் அனைத்து ஜெப கோபுரங்களிலும் நடைபெறும்.
உங்களுக்கு அருகில் அமைந்திருக்கும் ஜெப கோபுரத்தில் கலந்துகொள்ள
அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

REGISTERED NEWSPAPER RNI No.TNTAM/2003/10418

SEESHA
LET'S GIVE LIFE

# இன்றைய பயிற்சி நாளைய வெற்றி!









இந்தியாவில் ஏறக்குறைய 12.9 கோடி மக்கள் கொடிய வறுமையில் வாழ்கிறார்கள்; அன்றாட வாழ்க்கை தேவை சந்திக்கப்படாமல் போராடுகின்றனர். வேலையின்மை என்பது பலருடைய முன்னேற்றத்தை தடுக்கும் பிரதான தடையாக இருக்கிறது. குறைந்த கல்வியும், திறன் அளவும் கொண்ட வாலிபரிடையே இந்த பிரச்னை அதிகமாக இருக்கிறது.

இந்தியா முழுவதும் நலிவுற்ற வாலிபர்கள் மற்றும் பெண்களுக்கு, சீஷா தொழில் திறன் பயிற்சி வழங்குவதன் மூலம் தொழிற்சாலைகளில் அவர்களை பணிபுரிய வைப்பதோடு, அவர்களுக்கு வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது.

**சமீபத்திய நிகழ்ச்சிகளில் முக்கியமானவை சில:**

- கடந்த நிதியாண்டில், சென்னையிலும் ராஞ்சியிலும் ஏறத்தாழ 250 மாணவருக்கு அடிப்படை கணினி பயிற்சியும், Tally ERP பயிற்சியும் வழங்கப்பட்டது. அவர்களுள் 60% பேருக்கு உயர் ஊதியத்தில் பணி கிடைத்துள்ளது.
- கடந்த நிதியாண்டில் இந்தியா முழுவதும் நலிவுற்ற 624 பெண்களுக்கு தையற்பயிற்சி, அழகுக்கலை பயிற்சி, ஆரி பயிற்சி மற்றும் தேவைப்படும் வணிக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.
- 313 பேருக்கு பொருளாதார பயிற்சி, EDP மற்றும் மென்திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பு ஏற்படுத்திய பயிற்சி



நான் கல்லூரி முடித்த பிறகு, உரிய திறன்பயிற்சி இல்லாமையால் எனக்கு வேலை கிடைக்கவில்லை. நான் செலுத்தக்கூடிய கட்டணத்தில் Tally பயிற்சியை தேடினபோது, சென்னையிலுள்ள சீஷா திட்ட மையத்தில் Tally ERP பயிற்சி நடத்தப்படுவதை அறிந்து, அதில் சேர்ந்தேன். அதன்மூலம் Tally, Microsoft Office மற்றும் டிஜிட்டல் திறன்களைக் கற்றுக்கொண்டேன். அவர்கள் உதவியுடன் புகழ்பெற்ற டயர் நிறுவன சில்லறை விற்பனை நிலையத்தில் கணக்கியல் உதவியாளராக ரூ.15,000/- மாத ஊதியத்தில் பணி கிடைத்தது. சீஷாவுக்கு நன்றி.

P.A. ராக்லேண்ட், Tally பயிற்சி பயனாளி, காவல்கிணறு.

**புதிய கல்வியாண்டு தொடங்கியுள்ள நிலையில், பல்வேறு நலிவுற்ற பகுதிகளில் கற்றல் மற்றும் திறன் பயிற்சி மையங்களை தொடங்கி, சிறுபிள்ளைகளுக்கும் வாலிபர்களுக்கும் பிரகாசமான எதிர்காலத்தை தரமான கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் மூலம் ஏற்படுத்த முயற்சிக்கிறோம்.**

**இந்த உன்னத பணிக்கு நீங்களும் கீழ்க்காணும் வழிகளில் உதவலாம்:**

- சீஷா கற்றல் மையத்தில் ஒரு மாணவனின் கல்விக்கு உதவ ரூ.350/- (ஒரு மாதத்திற்கு)
- ஒரு நபருக்கு தொழிற்பயிற்சி அளிக்க ரூ.500/-
- ஒரு நபருக்கு கணினி பயிற்சி அளிக்க ரூ.850/-

DONATE TO SEESHA

ALL DONATIONS ARE TAX-EXEMPTED UNDER SECTION 80G

UPI ID : 9384015155@okbizaxis

UPI: G Pay, PhonePe, Paytm, UPI, amazon pay
Wallets: OLA MONEY, freecharge, MobiKwik, JioMoney

You can also donate through www.cashfree.com/payme/seesha

044 66660000
+91 9300 600 600
www.seesha.org
info@seesha.org
SEESHA house No.37, Gandhi Road, Tambaram (West), Chennai - 600045

* When you Donate send the Details to +91 9300 600 600